249

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றகீதம்

இஃது,
மெய்ஞ்ஞான சொரூபமாகிய
தற்கலைப் பீருமுகம்மது சாகிபவர்கள்
திருவாய்மலர்ந்தருளிய

# பிசுமில்குறம்.

இட்டா. பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்,
சென்னை சக்கரவர்த்தி பிரஸ்
இதன் விலை] 1947 [அணா 0-8-0
நெ. 189, தங்கசாலை வீதி, மதராஸ்.

Q7:417
N47
141897

பிஸ்மில்லா ஹிர்றகுமா னிர்றஹீம்

இ ஃ து

மெய்ஞ்ஞான சொரூபராகிய

தற்கலைப் பீருமுகம்மது சாகிபவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# பிசுமில் குறம்.

சென்னை - இட்டா,

**பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்**

சக்கரவர்த்தி பிரஸ்.

இதன் விலை] 1947. [அணா 8.

நெ. 189, தங்கசாலை தெரு, மதராஸ்.

# இஸ்லாம் மார்க்கப் புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முஹ்[illegible]தீன்மாலை 5-முனாஜாத்து சேர்ந்தது | 0 | 10 | 0 |
| [illegible]ல் [illegible]சுலாம்ஹனுபியா | 0 | 10 | 0 |
| மேற்பட[illegible]ர்ப்பியா | 0 | 10 | 0 |
| மெஞ்ஞா[illegible]ரத்தின அல[illegible]காரக் கீர்த்தனை | 1 | 0 | 0 |
| திருமுடி[illegible]றக்கிய ஹதீது | 0 | 3 | 0 |
| மாண விலக[illegible]மனதை [illegible]லக்கம் | 0 | 5 | 0 |
| [illegible]ாஜமணிமாலை | 1 | 4 | 0 |
| நசிஹத்துநாமா | 0 | 3 | 0 |
| கா[illegible]சிம்படைப்போர் | 0 | 4 | 0 |
| சக்கருத்து நாமா | 0 | 3 | 0 |
| சத்துருசங்காரம் | 1 | 0 | 0 |
| சையித்தூன் கிஸ்ஸா | 0 | 10 | 0 |
| ஞானமணி மாலை | 0 | 4 | 0 |
| ஷன்மூன்றலியார் கிஸ்ஸா | 0 | 6 | 0 |
| குறமாது | 0 | 10 | 0 |
| பெண்புத்திமாலை | 0 | 3 | 0 |
| தொழுகை அடவு | 0 | 3 | 0 |
| சலவாத்துப்பாட்டு | 0 | 3 | 0 |
| தொழுகைநாமா | 0 | 3 | 0 |
| இரத்தினமுஹம்மது காரணசரித்திரம் | 0 | 10 | 0 |
| பிசுமில் குறம் | 0 | 8 | 0 |

இட்டா - பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

189, தங்கசாலைத்தெரு, மதராஸ்.

பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இ ஃ து

# பி சு மி ல் கு ற் ம்.

காப்பு - வெண்பா.

அவ்வ லமைத்தபுவி யாகாச மேலரசு
செவ்வி லிருத்தியபின் சீரா்க—எவ்வுயிர்க்கும்
நல்லறிவை யீந்தவனே நானுவ்து பிஸ்மில்குறுஞ்
சொல்ல விறையோனே துணை.

விருத்தம்

நினைவுடன்பொருளும் நிறைந்திடும்வலகையும்நீதியும்பிசுமிலினோடே
அனந்தமுங்தெரிய அகுமதருரைக்க ஆதிதன்கிருபையினாலே
கசையமாரும் மவுலானா லுமி கழறினார் அகதியத்திலே
மனமதுமகிழ அறிவையுமறிந்து வழுத்தினார் சதக்கத்துல்லாவே.

## கண்ணிகள்.

ஆதிபெரியோனேறப்பில் ஆலமினையாதி
அகதுதிலைசமதாகஆல நிறைந்தோனே 1
அகதியத்திலுகதிபதும் லாகிதத்துமாகி
அரூபவுரூபத்துள்ளே தானல்லவோதாத்து 2
தாத்தல்லவோபாத்தினது லாகிறுசிபாத்து
லாகிறுக்குள் பாத்தினான் ரகசியத்தின்பொருளே 6
பார்த்தல்லவோதோத்திரமாய் நேத்திரத்தின்கலிமா
ஆத்துமத்திற்கதுதானே ஐனென்றகலிமா 4
ஐனென்றகலிமாவை அறிந்துளத்திற்பொதிந்து
ஆசைநடுயிருபுறமும் காபக்கபுசைனி 5
காபக்கபுசைனியுட கருவையறியாமல்
காலமெல்லாங் கருத்தறியாப் போகுதேஅல்லாகு 6
கருவுக்குள்ளேகருவான கருவையறியாமல்
காலமெல்லாம் வீண்காலமாகுதேஅல்லாகு 7
உருவுக்குள்ளேயருவமில்லா திருவையறியாமல்
உலகமெல்லாங் கருத்தறியாப் போகுதே அல்லாகு 8

கருவோடுரினைவுமென்று யிருப்பதறியாமல்
ஹபீபுகுலங்கலக்கத்துக்குள் ளாகுதேஅல்லாகு 9

ஐனுக்குள்ளேபொருளான அகதிஞெளிதுலங்கி
ஆலமெல்லா முன்வாசம் வீசுதேஇல்லாகு 10

ஆதிமுகம்மதுதங் தீன்குலமேதழைக்க
ஆண்டவனே யுதவிசெய்யா யாமீனுமீனுமீன் 11

ஆணிலைதவிராத மூமீன்குலத்தோரே
ஆமீஞர்பெற்றெடுத்த ஆலநபிபொருட்டால் 12

மூமீகுலங்க ளனைவோருமொலியாக
முன்னவன்தன்கிருபையினல் தன்மனமகிழ்ந்து 13

கத்தவனேபாற்கடலிற் கன்சில்மகுபிய்யா
உத்தகுருபையிதிற நூலுவந்துசொன்னர் 14

எத்திசைக்கும் பொருள்விளங்கி யாவரும்வணங்கி
இசுலாங்குலத்திலனை வோருமொலிவாக 15

பேர்பெருகும்பிசுமில்குறம் பெலனலனைவோர்க்கும்
பீருமுகம்மதென்போன் பிரியவனமுற்று 16

ஆதியருள் தூதரையும் யார்கள்முத்துபொலியும்
அனைவோரின் அடிபணிந்து அடியேன்றமிழுரைத்தேன்

வேதஇசுலாத்தின்குல மானவரேவில்வேன்
வெற்றியுள்ள பிசுமில்குற மெத்தக்கடலறிவு 18

அருவானபொருள்தேடி அலைந்தலைந்துசாவார்
அறிவிருக்கும் தலமறியா தாவிவீணேபோவார் 19

குறையாதபொருளைரொம்பக் கொள்ளையிட ஆசை
கொள்ளையிடப் பொருளுமில்லை கொடுப்பாருமில்லை 20

கொள்ளையிடப் பொருள்தேடிக் குவலயத்திலலைந்து
கொள்ளைகிடையாமல் மனக்குறையாலேவாடி 21

விள்ளாமல்துயரமதி விறந்துபோகவேண்டாம்
வேண்டுமட்டும் கொள்ளையிட விட்டானந்தவீட்டை 22

அந்தவீட்டின் ரத்னமலை அனந்தங்கோடிகுவியல்
எந்தமட்டுங் கொள்ளையிட எதர்க்குமனப்பொருத்தம் 23

திருடமனமுள்ளவர்கள் திருக்கலிமாப்பார்த்து
திருடமட்டுந் திருடிக்கொள்ளத் திருவாக்குக்கொடுத்தான்

திருடவனுவில்லாரும் தெளிந்துலளியாகார்
திருக்கலிமாத் தெளிவாகத் தீனவர்க்கேயுரைத்தான் 25

ஆராய்ந்துநினைவுடைய நிலையைஅறிவீரே
அறிவுக்குள்ளே அறிவான யறிவையறிவீரே 26

பராபரந்தனிலே பஞ்சவன்னமாகி
வேறுதூராய்முளைத்த இதழவித்தையறிவீரே 27

தீனவரேபிசுமிலதின் செய்தியறிவீரே
திருக்கலிமா அறுநான்கு ஜெயஎழுத்தையறிவீர் 28

எழுத்தெழுத்தின் பொருளுமென்ன எழுத்தினிறமென்ன
எழுத்தெல்லாம் உடலுக்குள்ளே எங்கேயெங்கும்நிற்கும்

எழுத்துச்செய்யுங் குணங்களென்ன எதற்குமுதலெழுத்து
எழுதாத அலிபெழுத்தி னி[illegible]த்தையறிவீரே 30

தொழுகைமுரீதுஎன்ன தாலிபுதம்கூத்துமென்ன
துய்யவுறுப்புடைஹறுபு உருக்காபோடேழும் 31

எழுவகைபொருளறியார் ஜாகிலாகுமென்ன
இதையறிந்தால்சாகிதா மூசாகிதாவுமென்ன 32

மூசாகிதாமூருக்கிபா முஜனுவுமென்ன
முக்கமிலமூவாசிலா மூபாக்கியாவுமென்ன 33

எழுவகைப்பொருளுமற்ற விதத்தையெல்லாமுரைப்பேன்
இறைநாமம்பிசுமிலதின் பெருமைசொல்லக்கேளும் 34

பிசுமிலுடன்கலிமாவும் அலிபுநிலைமூன்றும்
வேதக்கடலாதியருள் விபரநிலைதன்னை 35

நீதமுடனறியார்கள் நெடுநாளும்பாவி
நிசமாக பிசுமில்நிலை கலிமாமுரீதறிந்தால் 36

துசுமனெனும் இபுலீசின் தோஷமணுகாது
துய்யனிவ னருள்பெற்ற சுகமாகவாழ்வீர் 37

நிஜமாகஈமானும் நிலைக்கும்பிசகாது
நித்தனருள் பெற்றுசொர்க்க நெடுநாளும்வாழ்வீர் 38

உலகுதனிலெவருமவுத் தாகுமந்தநேரம்
உண்மையுட னோதியவர். உலகில்மவுத்தானால் 39

குலமிழந்துகுவலயத்தில் பாவிகளென்றாலும்
குலமான சகீதுடைய கோத்திரத்திலாவார் 40

பிசுமில்லாகிற்றகுமா னிற்றகீமெனப்பேசி
இயம்புவது இவைநாமம் பத்தொன்பதுஎழுத்தாம் 41
உயர்வானதோரெழுத்துக் கோரறிவுமுண்டு
நிச்சயமா யறிந்திருந்து நிலத்தில்மவுத்தானால் 42
துட்சணமாம்கொடுநகரம் பத்தொன்பதுநாவும்
தூர்படவே நீக்கிவைக்கும் தூய்யோனருளாலே 43
அறிவானபத்தொன்பது விபரமறிவதென்றால்
அழகானசரீ அத்துடன் அன்புதரீக்கத்தும் 44
அதுமேலே அக்கீரத்தென்று மகரிகத்துமாகும்
ஆதியுடன் முகப்பத்தென்ற முகுத்தியாகத்துமாரும் 45
ஏறுகின்ற பாதநிலை யியம்புமிதுவாகும்
ஏகமாகவணக்க நிலை யெட்டுமெக்காமுண்டும் 46
இலங்குகின்றநாசூத்து மியம்புமலக்கூத்தும்
இதுமேலே ஜபரூத்து லாகூத்துமாகும் 47
துலங்குகின்ற ஜம்கூத்துபாகூத்துக்காட்சி
துலையாதஆகூத்து தம்கூத்துஎட்டு 48
அலங்காரம் எட்டுமெக்காம் அறியநன்றாய்ச்சொன்ன
ஐந்துவகைதிக்கிர்முறை யறியும்வகைகேளும் 49
கலக்காததிக்றுஜல்லி கல்பியுடன்றாகி
காட்சிபெற்ற சிற்றியுடன் கபீயும்திக்கிர்ஐந்தும் 50
ஐந்துமிதுவணக்கநிலை ஆறும்சொன்னபாதை
அழகுமக்காம் சொன்னதெட்டும் பத்தொன்பது அறிவாம்
பத்தொன்பதை அறிந்தாலும் பிரிவறியவேண்டும்
பாதைமக்கா முடவணக்கம் பங்குவகைகேளும் 52
பங்குகளுமதினிடைய பாங்கானயாதும்
பார்வைதனிற் றேணுவது பலன்பெறுநாட்கெடுவும் 53
சிங்காரமாகவெல்லாஞ் சிறப்பாகவிரித்து
ஜெகமறிய செய்யிதிற ரூலியம்பினரே 54

வசனம்.

இனிமேல் பங்குநாமவிபரஞ் சொல்லுகின்றது முந்தினபாதை சரீஅத்துக்கு முந்தினமக்காம் நாசூத்துக்கு முந்தினவணக்கம் திக்கிர்சல்லியென்றும் அதின்விபரத்தையும் யாதையும் பிரித்துச்

சொல்லுகிற விபரத்துக்கு மறைபொருளான கவி முந்தினவிபரம் இசுலாமான பேர்களுடைய அடையாளம் சொல்கின்றது.

விருத்தம்.

வித்தில்லாமாமரந்தான் முளைத்தவாறும் விருட்சத்தில் ஆறு நான்குபணைநின்வாறும், கொத்தோடேபணர் நூறு தொண்ட வாறும் குவலயத்தில் தீன்குலமதானவாறும், எத்தனையோ கோடியிலை யிதழின் வாறும் எண்ணுமலையெழுதும் பொருளின்வாறும், பத்தோடே இரண்டுபணர் நிலைத்தவாறும் பழமொன்று தின்னுமல் தின்றவாறும், உற்றபணர் பனிரண்டிலேறுவாறும் ஒத்தமலர் பூத்ததுவே நற்றுவாறும், சத்தமாம் நத்தினதை நத்துவாரும் சாவாமற் சாவுமுன் சாவு வாறும், எத்திசையுமில்லாத ஊரின் வாறும் எடுத்தாடும் பாறையின்மேலேறுவாறும், இத்தனையுங் குறையாமலறிந்தபேரை இசுலாந்தங் குலமென்றே இயம்பலாமே.

கண்ணிகள்

முந்தினசரீ அத்தின் மொழிவிபரமென்றால்
முதற்கலிமாச் சொல்லீமான் கொண்டிசுலாமாகி 1

ஆறிரண்டு பொருளறிந்து அதின்படியேநடந்து
அல்லாஒருவன் அழியாதவனேயென்று 2

திண்ணயமாய் வணக்கமென்று நினைவுகொண்டுநாடி
நீதிநாளுத்தென்றமககாம் இஃதுமார்பைநோக்கி 3

வாயாலேயாதுகிற திக்கிறுமேல்நினைவாய்
வணக்கமுடனேதுவதும் வழமையுள்ளதெல்லாம் 4

மாயுமுன்னேமாய்கிறது மகிழ்ச்சிகுரலோசை
மறைகளெல்லாம் ஓதுறதும் மார்க்கம்வழியாகும் 5

நார்புகழும் நபியிறசூல் நடந்தசரீ அத்து
நாளுத்துமக்கா மதிக்காஜல்லி நமக்கடையாளம் 6

அடையாள முதல்வழமை யாகும்சரீ அத்து
அதைச்சேர்ந்த ஐந்துதிக்கிர ஐந்துயாதுமுண்டும் 7

இடதுமார்பைநோக்கி வலமாகத் தலைசுழற்றி
யேத்தயிலே யிருவிழியும் புருவத்திடைநோக்கி 8

இடமாகஇருநூறு யாதுமுடிவானால்
திருக்கியே தாழ்வாயிடது திமிர்நிலையிலேத்தி 9

மடக்கியிருபார்வைகுறை யாமலிடமார்பில்
மகிழ்ந்தூணிப் பார்க்க அதில் மலருமொன்றுதோன்றும் 10

தொடக்குந்திக்கிறிதுநர்மம் பிருக்காத்தியாகும்
தொனியாகவுன்னியுன்னி புவிநோக்கிச்செய்தால் 11

ஒடுக்கமுறையிதுதானே ஓதுகிறதாகும்
உன்னியுன்னி யெழும்புவது உயர்பாசமென்பார் 12

மடக்காமலிருத்துசெய்தால் மறுகூபியிதுதான்
மறுதோழி லடித்துச்சிரம் முயர்ந்துவதுதமரீ 13

முடுக்காகஐந்துவகை யாதறியச்சொன்ன
மூன்னெழுத்து மூச்சில் முடிவெழுத்தையுயர்த்து 14

உன்னியுன்னிஓயாமல் ஓதுமயாத்துஐந்து
ஓறுவது லாயிலாக இல்லல்லாகுஒள்று 15

அல்லாகு என்பதொன்று ஆகமென்பதொன்று
அப்புறமும்இல்லும் அகுமதுமுகபதைந்தாம் 16

அகுமதுமுகம்மதென்றால் ஐந்தும்சரீ அத்தாம்
ஆறிரண்டு மாதம்தவஞ் செய்யமலர்காணும் 17

வகையான மலர்தெரியா திருந்தாலுஞ்சரியே
வளமான யாதிலொன்றை வருந்திலட்சமோதில் 18

ஐயாமலோதினவர் உம்மத்தவர்நிஜமாம்
ஒழுங்காக இந்தமுறை தெளிந்துவளமானல் 19

மாயாமல்மாயுமன துள்ளமதியோர்க்கு
மகத்தான தரீக்கத்தின் மகிமைசொல்லக்கேளும் 20

வசனம்

இரண்டாவதுபாதை தரீக்கத்துக்கு இரண்டாவது மக்காம் மலக் கூத்துக்கு இரண்டாவது வணக்கம் தங்கீர்கல்பியென்றும் அதின் விபரத்தையும் வணக்கத்தையும் யாதையும் பிரித்துச் செல்கின்ற விபரத்துக்கு மறைபொருளான கவி. இரண்டாவது ஆலிம்களுடைய அடையாளஞ் சொல்கின்றது.

விருத்தம்

அறுநான்கு பணருள்ள மரத்தின்வாறும் அந்தமரம் வைத்தவனே உண்டவாறும், ஒருபத்து ரண்டுபணர் பிரிந்தவாறும் உள்ளிதழ்துகையபிர்துஓதுவாறும். அறுபத்துநாலுகலையோடும்வாறும்

அட்டதிசை பொருந்தியே நிற்கும்வாறும்-மறைவாக அட்ட திசையாடும் வாறும் வட்டத்தில் பிரிந்தவாறும் இருவாலும் ஒன்று இருக்கும்வாறும் இருசுழியும் ஒருசுழியாயிலங்கும்வாறும் உருவில்லா துருவையுரு வறிந்தவாறும் ஓசையொன்றேயாம லோதுவாறும் தவாராது வாசிவட்டமிட்டமாறும் வான்புவியும் காணாமல் மறைதங்வாறும் ஆராய்ந்து இப்பொருளைச் சொன்ன பேரை ஆலிமென்றுலகத்திலறியலாமே.

## கண்ணிகள்.

திறமானதரீக்கத்தின் விபரமென்னவென்றால்
தீனைகலிமாவில் அறுநான்குளஎழுத்து 1

பாவுடலிற்றறிக்கும் நிலைபறுலுடனிரண்டும்
பாங்குடைய விபரமுற்ற பான்மறையும்பொருளும் 2

தன்னுக்குள்ளே தனையறியத் தாய்தகப்பன்பங்கும்
தவமறிய இவையறிய தலைமைநிலையறிய

மன்னரானநபியின் பங்கும் மலக்குகளின் பங்கும்
மற்றுமுள்ள பொருளையெல்லாம் பிரித்துநன்றாயறிந்து 4

கற்றவனே வணக்கமென்று ‘கருத்துக்கொண்டுநாடி
கபிதிக்கீர் வாயினுள்ளே காதுமட்டுங்கேட்க 5

அல்லும்பகலோயாமல் காயினுள்ளேபக்கீர்
அதற்கிரண்டாமானமக்காம் மலக்கூத்திருநாசி 6

இருநாசிநடுநிலையி லிருபார்வையிருத்தி
யேத்தகுதாத்துமல் றிருதயத்திலேற்றி 7

பார்த்தல்லவோ வணங்கின்றது கபிதிக்றாகும்
பயமானதம்முநிலை பாதைவெளிகாண 8

ஐயங்கொண்டங்கேகுகின்ற ஏனிப்படியென்று
ஏத்தமுள்ள தரீக்கந்தென்றே அதுவுமறிவீரே 9

இதுதானே தரீக்கத்தின் வளமைநிலையாகும்
இவ்வணக்கம் செய்யுமுறை யாதுவகை ஐந்தும் 10

இதமாக இல்லும்அல்லும் அல்லாவென்பதொன்று
இன்னமிதே அல்லாகூ ஹக்கல்லாகுமாகும் 11

ஏதாலும் ஒருயாதை இருதயத்தில்பிடித்து
எப்போதுமிதைத்தானே யெடுத்தாடும் விபரம் 12

விவரமென்ன வாயினுள்ளே விள்ளாமலோதும்
விளம்புவதி லவர்நினைவை விட்டுப்பிசகாமல் 13

இருபார்வை யிருமூக்கு நுனியிலதைப்பொருத்தி
எதிராதநடுமார்பின் குழியில்விழும்விதமாம் 14

தளம்பாமலிருபார்வைத் தலமும்ரண்டும்பொருந்தத்
தலைமடக்கிப் பிசகாமற் றவனிலையைப்பொருத்தி 1

இருந்துவிழிபிசகாமற் பொருந்திப்பார்த்துலருங்கில்
இருபார்வை நிலைதனிலே யிலங்கிமலராடும் 16

இருநூற்றியிருபதுமே லேறச்செய்யும்சாது
இப்படியேயிருமூன்று மாதமிதின்கெடுவாம் 17

உருவான தோத்திரங்கள் தெரியாதபேர்கள்
ஓதினவை ஒருநூறு யிரமுமதைஓத 18

குருவாமுகம்மதின்றங் குலத்திலிசுலாமாம்
குதாஇறையே சொன்னபடி யுயர்ந்தகுலமாகும் 19

இதுதான் தரீக்கத்தென்றே யெடுத்துநன்றாய்ச்சொன்னேன்
இதமாக ஹிக்கீகத்தினி யெடுத்துரைக்கக்கேளும் 20

வசனம்.

மூன்றாவதுபாதை அக்கீகத்துக்கு மூன்றாவதுமக்காம் ஐயறாத்துக்கு மூன்றாவதுவணக்கம் திக்கீர்றாகியென்றும் அதின் விபரத்தையும் வணக்கத்தையும் யாதையும் பிரித்துச்சொல்லுகின்ற விபரத்துக்கு மறைபொருளான கவி.

## இனி ஆபிதுகளுடைய அடையாளந் தெரியச்சொல்லுகின்றது.

விருத்தம்.

குடியில்லாவீட்டில் குடிகொண்டவாறும் கொடியஇரு ளகல வொளியிலங்குவாறும், அடியோடேகலையெல்லாமகண்டவாறும் ஐந்தெழுத்து மூன்றெழுத்தா யமைந்தவாறும், குடியான பேர் நிலைமை யற்றவாறும் கொற்றவனும் குடியொன்று தனித்தவாறும், வடிவொன்று சிறமூன்று கிளையின்வாறும் வருந்தியொன்றை யொன்றுதான் வணங்கும்வாறும், முடியாத கலையோதத்தொடர்ந் தவாறும் முளைதப்பித் தாழ்ந்தகுலமானவாறும், அடியோடே சாய்ந்தமரமெழுந்தவாறும் அத்தனிங் கனியாகச் சொரிந்த வாறும், படியாத வேதகலை பாடுவாறும் பார்க்காமல் பார்த்த தொரு கூற்றின்வாறும், அடியோடே யிப்பொருளைச் சொன்ன பேரை ஆபிதென்றே யுலகத்திலறியலாமே.

## கண்ணிகள்.

வாகுடனே அக்கீன்கென் றெவருஞ்சொல்வாரறியார்
வகைவிபரந்தெரியநன்றாய் வகுத்துச்சொல்லக்கேளும் 1

துகையான உடலுயிரு முழுதுமுள்ளதெல்லாம்
துய்யவன்றன் பங்குஅல்லா தோழர்நபிபங்காம் 2

நகையாதநாயன்பங்கு நமக்குப்பறுலாகும்
நாயன்றன்வணக்கமெல்லாம் நபிக்குசுன்னத்தாகும் 3

பகையாதநபியிறசூல் பங்குசுன்னத்தாகும்
படைத்தவனைவணங்குமது பறுலுநிலையாகும் 4

வகையாக கலிமாவில் வரிசைரண்டுளெழுத்து
வல்லவனும்நபியுமொன்றாய் வரைந்தஉயிரெழுத்தே 6

ஜெகத்திலுள்ள நன்மைதின்மை சோதுகையெழுத்தும்
சிங்காரமலக்குகளும் செய்தியறியாமல் 6

சுகமாகஅவரவர்கள் செவியிலுமகேனாமல்
சொல்லாதேவாய்துறந்து சுழன்றுவருமூச்சில் 7

எள்ளளவும்பிசகாமல் இருதயத்தில்நினைவில்
ஏத்துவது இறைபறுலாம் இறக்கசுன்னத்திறசூல் 8

ஆத்துமத்தில் ஒருமூச்சுங் கசதியுடன்போனல்
அந்தமூச்சு அச்சணமே யழிந்துமவுத்தாகும் 9

பாத்திரமா யொருமூச்சு யாதுதப்பிப்போனல்
படைத்தவன் கிருபையுட பரமதுகிட்டாதே 10

பாத்திமாமூச்சியது தப்பாமலிருந்தால்
பத்தியுடன் புத்தியுள்ள பாங்குதிக்கீறாகு 11

முத்தொளிவுஜபறாத்து மூன்றுமக்காமாகும்
முகத்துநடுப்புருவத்திடை முறுக்கிவிழிநோக்கி 12

ஒத்தநிலையாம்அலிபை யுவந்துமுச்சுடரை
ஒதுங்காமல் நினைவுக்குள்ளே யோர்மைநிலைநிறுத்தி 13

எத்தேயக்காலமுமே யுறக்கமில்லாநினைவு
இலங்குதுபார் மூச்சுடரும் இறைநபியும்ஆதம் 14

கத்தவனையறியும்ஹக்கிக் கத்துஜபறாத்து
காட்சிதிக்கீர்றாகியுட கணக்கு இதுதானே 15

இதைச்சேர்ந்த யாதுவகை ஐந்துவிதமுண்டும்
எத்திறக்கம் யாக்கரீமு யாறகீமுமாகும்

மாற்றுந்தவ நிற்றகீழும் மகுஹூபுமாகும்
மனமகிழ்ந்துகக்கில் மவுசூதோடேஜந்தே 17

இதுயாது ஐந்திலொன்றை வெளியிலும்விள்ளாமல்
விடுமூச்சில்விசைவிசையா யேத்திறக்கம்செய்ய 18

இதமாகமுக்கோண மாயிருந்துகொண்டு
இருமுழங்கால்மீதிலவா இருமுழங்கையிருத்தி 19

விதமென்னவிற்போல வளைந்துதலைகுனிந்து
விழித்துஇரு பார்வைநடு புருவத்தியைநிறுத்தி 20

அதுநிலையில் அலிபான முச்சுடரைநினைந்து
ஆடிவரும் முச்சிலவர் யாதுநிலைதொடுத்து 21

இதமாக இருநூற்றி ஐம்பதுயாதாகும்
இப்படியே மாதமொன்று ஏத்திறக்கச்செய்தால் 22

ஆதியமுள்ள முச்சுடராய் அலிபுமப்போதோணும்
அந்தநிலை தெரியாம லிருந்தாலுஞ்சரியே 23

இந்தவிதமாயிருந்து எடுத்தோறும்யாதை
இருபத்தையாயிரந்தா னேதிமுடிவானால் 21

முத்தமுகம்மதுதம் சுன்னத்துஜமாவாம்
முகம்மதர்தங்குல்மாகு மோசமிலலையென்றும் 25

இதுதானே அக்கீக்கத்தென்றே யெடுத்துநன்றாய்ச்சொன்
இதமாக மகரிபத்தை யினியுரைப்பதாமே [னேன்

வசனம்.

நான்காவதுபாதை மகரிபத்துக்கு நாலாவதுமக்காம் லாகூத்துக்கு நாலாவதுவ்வணக்கம்திக்கீர் சித்தியென்றும் அதின் விபாத்தையும் வணக்கத்தையும் யாதையும் பிரித்துச்சொல்லு கின்ற விபாத்துக்கும் மறைபொருளான கவி.

## இனி காமிலான பேர்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்.

ஆறுநூறுயிரமொன்றுனவாறும் ஆறுகலை நூறுமுன்னுடும் வாறும் நேரெதிரே நின்றவர்கள் ஒளிந்தவாறும் நின்றவர்கள் புவி நோக்கிப்படுத்தவாறும் பாராமற்பாத்தபூ மலர்ந்தவாறும் பத்து நூலெட்டுமலர் மலர்ந்தவாறும் வீறுனஇதழைந்து விரிந்தவாறும் வெட்டரளக்கோட்டைகுடிகொண்டவாறும் பூரணத்தைக் காணு

மல்கண்டவாறும் புதுமையென்றபேர்கூடப் புகன்றவாறும்மாறாத மதுவெறியைக் குடித்தவாறும் மந்த்ரசலையெந்திரத்தை மறந்தவாறும் ஏறாதகொலுமீதிலேறும் வாறும் இருபேரும் ஒரு குதிரையேறும்வாறும் காரணமா யிப்பொருளைச் சொன்னபேரைக் காமிலென்றெதிர்கொண்டு காணலாமே.

## கண்ணிகள்.

ஏத்தமுள்ளமகரிபத்து எந்தவிதங்கேளும்
இலங்குதுபார்லாகூத்து இருபார்வைமூடி 1

பார்த்தாலோவிழிசுழற்றிப் பாதாளநிலையில்
பயகாம்பர்நுபுவ்வத்திலே பதினாலிலொன்றும் 2

தோற்றுதுபார்காட்சியெல்லாம் தொகைகளெல்லாமறிந்து
துலங்கும் இசுலாத்தினடுத் தெளிவொளிவையறிந்து. 3

கலங்காதநினைவு அல்லா காட்சிநபியிறசூல்
ஹக்கும் அது நபியும் அது கருத்துட்பிசகாமல் 4

மலங்காமல் மறக்காமல் மறுபேச்சில்லாமல்
மாநிலத்தில் ஊணுறக்க மானதொக்கமறந்து 5

இலங்கும்நிலைலாகூத்து மகரிபத்துவெளியில்
ஏகமெல்லாமறக்கும் திக்கீர் சிற்றியிதுதானே 6

இதுதானே மகரிபத்து இதற்கு ஐந்துயாது
இருத்தியேகூ அல்லாகும் இன்னம்கூறும்ஹக்கும் 7

அந்த்கூவைமாற்றுவது அழுத்திக்குன்கூவதுவும்
அனுதினமும் குன்னென்பதை அணுப்பிசகாதிதுவும் 8

இந்தயாதுஐந்திலொன்றை யிருதயத்திற்பிடித்து
இருபார்வைநுனிமூக்கு மார்குழியில்தரித்து 9

பந்துமலர்விழிசுழற்றிப் பார்வையுள்ள இடத்திற்
பார்த்துவிழி முழிப்பதிலும் மூடுவது இதமாம் 10

இந்தவகையிருநூற்றி யிருபத்தைந்துயாது
இடைபிசகாதொருயாதம் இத்தவமேசெய்தால் 11

இந்துகதிரொளிபோலே யிலங்கிவட்டந்துலங்க
ஈரேழுநுபுவ்வத்திலொன் றெதிராகத்தோன்றும் 12

இந்தவகைதெரியாம லிருந்தாலுஞ்சரியே
இந்தவரைஈரேழும் ஆயிரமிப்படியே 13

திந்தாமற்ஜெயப்படுத்தும் பேர்கள்மதிமறப்பார்
ஜெகமறியசெய்யதிற னூலுறைத்தாலே 11

இந்தவகைமரிபத்தென் றிதையறியச்சொன்னேன்
இதற்கதிகம்முகப்பத்தின் விதமுமறிவீரே. 15

வசனம்

ஐந்தாவது பாதை முகப்பத்துக்கு ஐந்தாவது மக்காம் ஜெம் கூத்துக்கு ஐந்தாவது வணக்கம் திக்கீர்பியுடைய முதலர்வது வகையும் அதியும் அதின் வணக்கமும் யாதையும் பிரித்துச் சொல்லுகின்ற விபரத்துக்கும் வறைபொருளான கவி.

## இனி குருமார்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்

நாட்டமிரண்டு மொன்றானவாறும் நடுவிலொரு கலைமானைத் தேடுவாறும் ஓட்டமாயிருவேடன்வந்தவாறும் ஒருமானும் ஒரு கிணற்றிலொளித்தவாறும்தோட்டமாயோடினவர்திகைத்தவாறும் திருமானைத்தீண்டாமற் பிடித்துவாறும் ஆட்டமாயறுக்காம லறுத்தவாறும் ஆறு வைத்தொன்றைச் சமைத்தவாறும் கூட்டமாய்க் கூடியே பேருண்டவாறும் கூட்டமொன்றில்லாமற் றனித்தவாறும் போட்ட பங்காறு மொன்றானவாறும் பெண்மானைக்கலை சேர்ந்து புணர்ந்தவாறும் காட்டினிடம் புலியை மானறேடுவாறும் கானகத்துப்புலியை மானுண்டவாறும் நாட்டிலே இப்புதுமை தன்னைச் சொன்னால் நாமவரைக் குருவென்று நாடலாமே.

கண்ணிகள்

அலங்காரப்பொருள்தெரியு மறிவநிலைதெரியும்
ஆதியின்றன் முகப்பத்தென்றீஐந்தாம் மக்காம்விபரம் 1

இலங்குதுபார்ஐனும் எக்கீன் ஏதனிலைசுழற்றி
இடைமுடி ஜெம்கூத்து ஹக்குல்எக்கீன் நிலையில் 2

வலமிடமும் நடுநிலையில் வைத்துப்பிசகாமல்
வருமூச்சை அடக்கியேஉள் ளிருந்திமனம்பார்க்க 3

துலங்குதுபார் சூதறத்தது ஆயிரத்தெண்மலராம்
சுல்தான்நசீறுமென்ற துய்யனுந்தொளிவு 4

நிலையாகவே அலிபு நீண்டுநடுநிலையில்
நிற்குதுபார் நூலின்வட்டம் நுக்கத்துக்கருநாதம் 5

தலைமேலேகூவுமது தரித்ததின்கீழ்மீமாம்
தவநிலையிற்பெரிதான முகுஜிசாத்துமாகும் 6

கமலமென்றமீன்தலையிற் காணும்விண் ணுலகில்
காணும்ஐந்துறாகில்நடுக்குத் தூசிருதபுதையம் 7

இதுதானேமதிவிருத்தம் முச்சுடரைந்தெழுத்தும்
இன்னங்கலிமாவுயிரும் காவும்கூவும்கீயும் 8

அதுதான் அல்லாகுவென்று அழகாகூட்டில்
அங்கமுருத்தெரியாதுகண் ணாடிக்கலிமாவில் 9

அதுதானேயவனொளிவி லன்றுபிரிவான
அதுதான்குத்தூசுமுன்னே நாமிருந்தரூபம் 10

அதுதானேபால்கொடுக்க ஆச்சரியமாகும்
அதுதானே யறிவுசொல்லும் அறுதியினாள்சொல்லும் 11

அதையறிந்தால்ஆகிறத்தில் ஆதிதீதாறுண்டும்
அறியார்க்குத்தீதாறங் கணுவுங்கிடையாது 12

இதைத்தான்குத்தூசியென்று இருதயமாய்ச்சொன்னேன்
இன்னம்வகைசொல்லுவதை யெல்லோருங்கேளும் 13

எல்லோர்க்குமுபகார மாகச்சொல்லும்விசளம்
இதிலும்ஐந்துயாதுண்டத்தில் இதற்குமூன்றுயாது 14

சொல்லாமல் ஹாஹீயென்றீ கழித்துஹூஹூவென்று
சுழித்தமூச்சையாகூ அல்லா வென்றுசொல்வதுண்டு 15

இந்தயாதைக்குருவுரைத்தே தம்மாகத்தொடுத்து
இருசுடருமேத்தியுள்ளே நடுச்சுடரைத்தோற்றி 16

ஒத்துவ்ருமவாசியுடன் உள்ளெழுத்தைப்பூட்டி
உறுதிநிலை வையாமல் உள்நிலையில்மாட்டி 17

பத்திபத்திடார்வைவளம் பலதுமொன்றாய்த்தொடுத்து
பத்துப்பத்தாப்பத்துஉரு பக்துத்திரமானால் 18

மெத்தப்பெரிதான்வகை மேலவன்றானடுவான்
மேலானபாதையிது மேலதிகம்மெத்த 19

ஆலமதிலுள்ளகுலம் ஆர்குலமென்றாலும்
அச்சணமே தீன்குலத்தி லானவொலியாகும் 20

நால்மறையிலிறையுரைத்த உட்பொருளுமிதுதான்
நாயன்றன்னை வணங்கச்சொன்ன நடப்புமிதுவாகும் 21

உத்தசெய்தியாகவிதை ஒளியாமற்சொன்னேன்
உலகவரே யிதைச்சேர்ந்தபாகூத்தைக்கேளீர் 22

### வசனம்

ஐந்தாவது பாதை முகப்பத்தைச்சேர்ந்த ஆறுவது மக்காம் பாகூத்துக்கு ஐந்தாவது வணக்கம் திக்கிர்நபியைச்சேர்ந்த இரண்டாவது பிரிவையும் அதின் வணக்கத்தையும் யாதையும் பிரித்துச் சொல்லுகின்ற விபரத்துக்கு மறைபொருளான கவி.

## இனி குருமார்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது.

### விருத்தம்

வீட்டிலே யொருவன்குடி யிருக்கும்வாறும் வெளியிலிருபேர்காவலிருக்கும்வாறும், கூட்டியே மூவரையும் சேர்க்கும்வாறும் கூடாமல் மூவரையும் பிரிக்கும்வாறும், ஆட்டியேயிருவரையும் அமர்ந்தவாறும் ஆறிரண்டுபேரொருவ ரானவாறும், எட்டிலே யெழுதாத கலையின்வாறும் எழிரண்டு ரேகையொன்றுனவாறும், நாட்டாமனுட்டுமொரு வாசல்வாறும் நான்குபத்துமூன்றுவீடானவாறும், வெட்டாதகுளத்தில் மான் குடிக்கும்வாறும் வீதியைந்து கோட்டையைமான் சுமக்கும்வாறும், கட்டாதகொலுமேடை காணும்வாறும் கன்னிகொலு விருந்து கதை பாடுவாறும் பாட்டிலுள்ள பொருளறிந்து சொன்னபேரைப் பாருலகிற் குருவென்று பணியலாமே.

### கண்ணிகள்

இதைச்சேர்ந்த தின்னம்லுன்று யாகூத்துநிலமை.
இதுவுந்திக்கிர்நபியாகும் முகப்பத்துவெளியில் 1

மதிபோலஐனுல்எக்கின் நிலைநிறுத்திமூடி
மனதுக்குள்ளே நினைவுதன்னை மகிழ்ச்சிகொண்டுபார்க்க 2

விதமாகப்பதினன்கு நுபுவ்வத்தப்போதெரியும்
வெற்றியுள்ள கல்புக்கடல் புத்திரமான்வட்டம் 3

அதுதானே வெள்ளைவட்டம் ஒங்காரமான்
ஆதமல்லோ பச்சைவட்டம் அதிற்பவளநபியும் 4

மதிபோலே முச்சுடரு மானநிறம்மூன்றில்.
மக்காமின்மகுமூதா நடுநிலையின்நீலம் 5

பதியெல்லாம் புகழுமகு மூதுதிருவடிவிற்
பளிங்கியிலுந் தெளிவான பானபொருளினுருவே 6

இதுதானே நாகுநிலை இயாதுநினைவாகும்
இரவுபக லாகுமிது இருநாசிவாய்வு 7

நினைவுமதுநினைவுதன்னை நினைவுகொண்டுபார்க்க
நினைவுக்குள்ளே நினைவுபோலே நிற்குமேகண்ணாடி 8

கண்ணாடிக்குள்ளொளிவு காணுமவன்ரூபம்
முன்னாலே நாமிருந்த மவுனமவன்ரூபம் 9

அறியும்வகைபாகூத்து அதற்கிரண்டுபாதி
அலுங்காமல் யாகூவென்று அழுத்திஉயரெத்த 10

குலுங்காமல்யாகூவுடன் கோர்த்துஒருமீமைக்
குலுக்கியாவென்றிருத்தி அந்தநம்மநிலையெத்த 11

சேர்மானமூன்றெழுத்தின் சேதிசொல்லக்கேளும்
செப்பியது மூன்றெழுத்தும் முப்பொருளுமிதுவாம் 12

முப்பொருளுமிதுவானால் முறையாகச்சொல்லும்
முகம்மதென்று சொல்வது முடிவில்வருமீமாம் 13

மீமுகம்மதுற்றகூலும் விளம்புகின்றதாயாம்
முன்னுரைத்தகூவும்முன்னே ருகும்நம்மதந்தை 14

நாமாகும்வாவென்பது நமதுபிதா ஆதம்
நாடுந்தவ மும்பொருளி னவிலெழுத்துமூன்றும் 15

எழுத்துமூன்றுந்துகையான இலக்கம்ஐம்பத்தைந்தும்
அந்தலக்கமுலகைவருக் கைம்பத்தைந்துபறலாம் 16

ஐம்பத்தைந்து அறுசேணி யைம்பத்தைந்துபடியாம்
அரியோன்மிகுறாஜிறை அறுசில்நபியானார் 17

அந்தமிகுறாஜிவளம் ஆலத்துள்ளோரறிந்து
அப்படியேசெய்தவ்மும் அப்படியாமெனவே 18

எத்தயிடம் உலகுமக்கம் ஏணிஅறுசெதுவால்
ஏறியதார் இறையாராங் கெதுவசனமெனவே 19

உந்தியடிஉலகுமக்கம் உயர்ந்தநெஞ்சுக்ஃபா
எழுந்தேருள் ஏணிமூன்றில் எழுத்தரசுசிரசாம் 20

நல்லமதிசெயலான நாட்டம்நம்மநபியாம்
நடுச்சுடர்நின்றுடுவது நமக்குஇறையதுவாம் 21

நாமந்தநடுச்சுடரை நாடிக்கூடியறிந்தால்
நபியிறைசெய்வசமீகு ருசநமக்கிதுவே 22

இந்தமீகுறுசுகா மிப்படிச்செய்வதிதுதான்
இதமாக சொன்னபடி யெடுத்துச்செய்வதென்று 23

சிந்தாதமதியோர்க்குத் தெரியும்படியுரைத்தேன்
செப்பாதஆகூத்துச் செய்திசொல்லக்கேளீர் 24

வசனம்

ஆறுவதுபாதை முகப்பத்தைச்சேர்ந்த இரண்டாவதுபிரிவு ஏழாவதுமக்காம் ஆகூத்துக்கு ஐந்தாவதுவணக்கம் திக்கிர்நபி யைச்சேர்ந்த மூன்றுவது பிரிவையும் அதின் வணக்கத்தையும் யாதையும்பிரித்துச் சொல்லுகின்ற விபரத்துக்கு மறைபொரு ளான கவி.

## இனி குருமார்களுடைய அடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்.

வித்திலே கலந்திருந்த பொறியின்வாறும் வீதிவரும் வாசி யுடன் குலத்தின்வாறும், ஒத்துவரும் ஐந்துமுன்னேயிருந்தும் வாறும் ஒன்றுவிட்டு நான்குமொன்றானவாறும், பத்தெழுத்தும் ஒரெழுத்தாய்ப்பூண்டவாறும் பள்ளிகொண்டு மேலிருக்கும் பாவைவாறும், பத்துகாலரேகைதியதிலிருக்கும்வாறும் பருவ முள்ள உருவமதில் தரிக்கும்வாறும், பற்றுநீயே பண்டாறுஞ் சூடு வாறும் பரத்தினருள் பாடிவரும் பதத்தின்வாறும், முத்துப் பச்சை ரத்னமணி கோத்தவாறும் முன்னழகும் பின்னழகும் பூண்டவாறும், இத்தனையுங் கண்டதையுங் காணுவாறும் இறந்த பேரெல்லோரும் பிறந்தவாறும்; எத்திசைக்கும் பொருள்விளங் கச் சொன்னபேரை யெல்லோருங் குருவென்று இயம்பலாமே.

கண்ணிகள்.

இனிக்கேளும்திக்கிர்கபி முகுதிபாத்துவெளியில்
ஏழாமக்கமான ஆகூத்துவிபரம் 1

தனியவனே அருமதுவாய் ஆதமுமாயான
தந்தைவிந்து தாயுடலிற் றனுருவாயமைந்த 2

கருவுக்குள்ளே தரிக்கப்பட்ட நினைவொளிவையறிந்து
கருநிலையி லெழுந்தபுகை கழறுஞ்சுழர்மூச்சில் 3

வருகிறதிற் சேர்ந்துஒன்றாய் மவுனமைந்து எழுத்தை
வாசலெல்லாம் நன்றாக வகுத்திக்கட்டிப்பார்க்க 4

தெரியுதுபார்கமலத்துள்ளே சேர்ந்தபத்தெழுத்து
திறமான குதறத்துமே லிருபத்தினாலெழுத்தும் 5

சறுத்துமொன்றாய்ச் சமைந்திருக்குந் தவிசுகொலுமேலே
சகலகலையும்பொருந்தி தாத்துசிபத்தொன்றும் 6

நிறத்திலொளி சுடர்நீதி ஆசிக்குமகுருக்கு
நிற்குதுபார் கூவும்மீமும் நினைவுங்கருவுமிதுதான் 7
யாருமறியாரேக மாலுள்ளஎக்கின்காட்சி
அறிந்தமர்கள் ஆலந்தனை அசதியிலும் பாரார் 8
தெரிந்துநன்றாய் பகுந்துசொன்னேன் தீனவர்களறிய
திக்கிர்கபிதிடத்த ஆகூத்துதாமே 9
இதற்கும்உயிரெழுத்தான யாதுவகைமூன்றில்
இதைச்சேர்ந்த யாதிரண்டு எடுத்துரைக்கக்கேளும் 10
எவற்குபெரிதானதவம் இறைகபியுமொன்றாய்
இருப்பதென்ன கூவும்மீமும் இணைத்துக்குமென்பதுவும்
கதித்ததொரு ஹாவும்மீமும் கடுகிப்பிடிக்கும்மாம்
கசகாமற்பிடிக்குமந்தக் கருமஞ்சொல்லக்கேளும் 12
இதுயாதிரண்டிலொன்றை யிருதயத்திற்றெடுத்து
எவ்வளவு பிசகாமல் இதுமேலே நினைவாய் 13
அதினுடையவளமறிந்து அதைக்கருத்தில் தரித்து
ஆடிவருமூச்சையுள்ளே யடக்கியதைப்பிடித்து 14
ஒடுக்கியுள்ளே உன்னுடலில் ஒன்பதுவழியும்
ஒழுங்காகக்குருவுரைத்த உரைப்படியே பிடித்து 15
மடக்யுடலொடுக்கிசுகு திட்டுமணம்பார்க்க
மற்றுமுள்ளபொருள்நிலையும் மற்றதெல்லாம் தெரியும் 16
உற்றசெய்தியாயுரைத்தேன் ஆகூத்து இதுதான்
உரைக்காத தம்கூத்தை உலகவரே கேளும் 17

வசனம்.

ஆறுவதுமுக்தியாத்தைச்சேர்ந்த எட்டாவதுமக்காம் தம் கூத்துக்கு ஐந்தாவதுவணக்கம் திக்கிர் கபியைச்சேர்ந்த நான்காவது பிரிவும் அதின்வணக்கமும் யாதும் பிரித்துச்சொல்லுகின்ற விபரத்துக்குமறை பொருளானகவி:

## இனிமேல் குருமார்களினடையாளஞ் சொல்லுகின்றது.

விருத்தம்

ஆதியே அநாதியாயிருந்தவாறும், அரூபமே உருவமாயெழுந்தவாறும் தாதுபழம் மாதனையிற் பழுத்தவாறும், தான்படாந்த கோவையுடகனியின்வாறும், வாதமுண்டு தாதுபழம் வளர்ந்த

வாறும், வன்னிமரம் கனிதனிலே முளைத்தவாறும, சோதிமரம் நாலுபணரானவாறு சுரூபமுறும் ஐந்துமொன்றானவாறும், நீதமென்னும் இலைரண்டு இதழின்வாறும், நிலையாத நான்குவேறொன்றானவாறும், ஆதிமரம் மூன்று நிறமானவாறும், அந்தமரம் அட்டதிசை படர்ந்தவாறும், வேதமெனனும் கனிநடுவிற் பழுத்தவாறும், வெகுபேர்களுண்டுகுல மானவாறும், இப்புதுமை உலகத்திற் சொன்னபேரை, எல்லவருங் குருவென்று பணியலாமே.

## கண்ணிகள்.

அறிந்துகொள்ளச் சொல்லுகிறேன் முக்தியாத்துவெளியில்
ஐந்தாம்வணக்கம் திக்கீர்நபியின் முடிவாகும் 1

பொருந்துமெட்டாம் புகழுமக்காம் தப்கூத்துவிபரம்
போதமுந்தனுதநிலை புகல்யாகும் நுக்த்தொன்று 2

அந்தக்கருநாதமணி சூடுநிலையொளிவு
அதுதானே யுதிரமெல்லாம் அணிந்துடலாய்த்திரண்டு 3

விந்தையுள்ள கருவுக்குள்ளே விளைந்தசூடுநினைவு
வேகமுடலெங்குமுயிர் வெதுவெதுத்தேநிற்கும் 4

அங்கமெல்லாம் நபியாகும் அவனிலைவேறாகு
அதுதானே கருநினைவு ஆசையுடனறிவு 5

கருநாதம்நுதல்நடுவே காபக்கபுசைனி
கண்ணுன பார்வையொளி ஹக்கென்றறிவீரே 6

இன்னங்கருநாதமினிப்பேச்சு மூச்சுப்பார்வை
இரக்கமுடன் கோபங்கேள்வி எதுவுமதுவாகும் 7

தன்னையறிந்தல்லவோ தனதுபொருடறிந்தால்
தானேதான் தானேதான் தம்பிரானுமாகும் 8

கருநிலையிற்கருநினைவைக் கருவதினாலறிந்தால்
கடிதானபாவமெல்லாங் காற்றிற்பஞ்சாய்ப்பறக்கும். 9

அறவைத்தாங்கம்பே'ல அங்கமுளலாவி
அனியாயமடுத்தாலும் அழுகைக்கழுகப்போமோ 10

கருநிலையையறியாரே கழும்புபித்தளைச்செம்பு
காய்ச்சிநூறு பும்மிட்டாலுர் கழுமபுபோகாதுவமை 11

ஒருபத்துஒன்பதிந்த உயர்ந்தறிவுநிலையை
உலகமெல்லா மறியவென்று உவந்துரைத்ததாமே 12

உவந்துரைத்தவிதத்துக்கெல்லா முற்றசெய்தியாக
உலகமெல்லாமொலியாக உவந்துரைக்கும்விசளம் 13

உரைத்தவிதம்இருபத்தெட்டு யாதுயிர்நிலையினதிகம்
ஒன்றதிக மென்றுரைத்த யாதுமிதுவாகும் 14

ஊமையெழுத்தோரெழுத்து ஒருமூன்றுஐந்தாம்
ஓரெழுத்தே யெட்டெழுத்தா யொன்றானவூமை 15

ஊமைய்துவொன்றுமது ஒருமூன்றேயைந்து
உருமூன்றேயொன்பதாகி யொன்றானபொருளாம் 16

மறையானபலகலையு மற்றுமுள்ளமொழியும்
மாநிலத்திற் பாஷையெல்லா மடக்கியொருவெழுத்தாய் 17

எங்குமதுதானாக னிறைந்திருக்கும்பொருளாம்
எங்குமதுபலபாஷை யெவர்மொழியும்சரியாம் 18

முறையானதொருபொருளின் முப்பொருளுங்கூடி
முப்பொருளும் ஒன்பதாகி முடிந்தவூமையெழுத்தாம் 19

இதுதானேயாதொரு மிதில்வணக்கம்சொல்வேன்
இதமாக வணக்கமந்தி லேத்தமுள்ளதொன்று 20

விவமதிய வணக்கமது வெளியிலும்வாராது
வேதமெல்லா மடக்கியுள்ளே விட்டுப்பிரியாது 21

அதியமுள்ள வணக்கம்திக்கிர் கபியதுவுமேதால்
அணுவும்பிச காமல்மன துட்கருத்திற்பொருந்தல் 22

அதையறிந்தபெரியோரை யடிபணிர்துதொழுது
அவர்மேலே அதையறிந்து அறிவுக்குள்ளேதரித்து 23

அதைத்தானே ஆங்கதனுக்கு ளாட்டியோட்டியேத்தி
அதைமாற்றி மன்கூசை மஃகூசாய்த்திரும்பி 24

இருப்பதல்லோ கபியின்திக்கிர் யாதுமுடிவாகும்
இந்தமுறை யெந்தறிவு மென்றறிவதானால் 25

தறிப்பதுதான் முகுத்தியாத்துப் பாதைமுடிவாகும்
தவஞ்செய்யும் விதத்தையினித் தானறியச்சொல்வேன் 26

இதமாகசுகூதுவள மிதையறிந்து தனைமறந்து
இருக்கையிலே எட்டிதழும் இடைபிற்பதினாறு 27

இருபத்திரூனுமீழும் இதில்நடுமீமொன்றும்
இருபத்து ஐந்துமீழும் இலங்குமுள்ளேநிலையில் 28

உருவமில்லாதொருமீமும் உள்நிலையின்பொருளாம்
ஓரெட்டுரேகையதி லோடிவளர்ந்திருக்கும் 29

சுரூபத்தைவளைந்தவட்டம் சுககோட்டைசமான்
சுழிகொண்டவட்டத்துமே லிருப்பதினால்மீமும் 30

அறிவாக அத்தனையும் அழகாகத்தெரியும்
ஆயிரத்தெட்டிதழா யிலங்குமலர்மேலே 31

கருநடுவாய்நினைவுதனிற் கருத்ததனையிருத்த
கலங்கியது நடுநுகத்திற் கலந்தேயதுபிரிந்து 32

தெரியுமந்தவிண்ணுலகில் தெரியுமந்தப்படியே
தெரியுமதே திருப்பார்வை திறமாகப்பொருத்த 33

ஓரேழுவிண்ணுமுயர் படிதிறந்தேயேற
உடையவன்றன் குறுசறுசும் தறுகாவுந்தெரியும் 34

அரியதிரைவிலகும்படி யந்திரக்கூட்டியில்
ஐந்திதழின் மலரின்நடு அலியுமப்போதெரியும் 35

பெரியவனும் பிருதிவையு முற்றதுநாமென்றே
பேதமில்லாமல்மதி பெற்றிருப்பதென்றே 36

அரியவர்கள்உலகுதனில் மிகுறூஜென்றுரைப்பார்
அறியார்கள் ஆலம்வேறே அறுசுவறேயென்பார் 37

சரியானமிகுறூசு வுலகவருக்கிதுதான்
சையிதுமுகம்மதுற்ற சூலுரைத்தாலே 38

தெரியவென்று தினவர்க்குத் திறமானவகையைத்
தேடக்கிடையாதரத்ன திரவியமாலையை 39

பிரியமுடனேசொன்னேன் பீர்முகம்மதென்போன்
பெரியோன்றன்பிசுமில்குறம் பேசினதென்றறிவீர் 40

இதைத்தானே வுலகிலுள்ள குருவெடுத்துரைததார்
இதமானபிசுமில்முத லெந்தவிதங்கேளும் 41

## வசனம்

பிசுமில்குறக் காவியத்தில் பிசுமிலெழுத்து (19-க்கு) அறிவு (19) உண்டு அதின் விபரமாகின்றது பாதை (6) மக்காம் (8) வணக்கம் (5) ஆக (19-க்கு) செய்பாகம் முசாகிதா (28-க்கு) தள்ளுபிடி முசாகிதா (14) போக முசாகிதா (14-க்கு) பலனில்லா முசாகிதா (6) போக பலனுகும் முசாகிதா (8-க்கு யாது) (28-க்கு) முடிவான யாது (1) சகூது (2)

## இனி பிசுமிலின் விபரம் சொல்லுகின்றது.

### கண்ணிகள்

விந்தைபெறும்பிசுமிலதின் எழுத்துமுதற்கடையும்
விளம்பியது ஒருபத்து ஒன்பதுமேசரியாய் 1

அந்தெழுத்துக்கோரெழுத்துக் கோரறிவுமாக
ஆலமெல்லாமறியவென்று அழகாகச்சொன்னேன் 2

எந்தவகையெதற்கதிகம் பிசுமிலுடவளமை
யெல்லவரு மிருதயத்தி லறியக்கடனெனவும் 3

முந்தமுதல்கடைமுடிவு முறையாகவுரைப்பேன்
முமீன்களனைவோரு முவந்தறியத்தானே 4

அறிவான அறிவுகளி லதினமுள்ள அறிவு
ஆதிதிருநாமமது தானுமதுவதால் 5

சரியானபிசுமில்முதல் நாமமிறையறிவாம்
சகலகலைமறையுமது பிசுமிலதின்பொருளாம் 6

அருவுருவுஞ்சுருவமில்லா னமைந்தவிதமெல்லாம்
அருவுருவுஞ்சுருவமுமா யமைந்துமுடிந்ததுவாம் 7

எரியவன்றனமைத்ததெல்லாம் பேருசொல்லத்தெரியேன்
பெரியவனே தவிரவோரு பிருவும்வேறேயில்லை 8

அறியவகையித்தனையென் றறியவகையில்லை
அத்தனையுமவனுரைத்த அருள்மறையிலடக்கம் 9

எத்தனையோகோடிமறை யிறையுரைத்ததெல்லாம்
எடுத்தொடுக்கிக்குறுஆனை யிறையறியக்கொடுத்தான் 10

முத்தானகுறுஆனுக் குயர்ந்தமறையில்லை
முன்னுரைத்த வேதமெல்லா முடிவில்லையென்றே 11

அத்தனையுங்குறுஆனுக் குள்ளடக்கிவைத்து
அடங்காதகுறுஆனை அணுப்போலேசுறுக்கி 12

தொீததான ஆயத்தொரு ஐந்துக்குள்ளேயொடுக்கி
குலகுவல்லா வென்றுசொல்லிக் குவலயத்திலிறுக்கி 13

அத்தையுமேசுருக்கியொரு ஐந்தெழுத்தாற்பிடித்து
அல்கம்தென்ற ஐந்தெழுத்தால் அனைத்துமதிலமுடித்தான்

கத்தவன்றன்றிவாக்கா லுரைத்ததுஅல்கமது
கடனமலையும் கடுகுக்குள்ளே காணுவிதம்போலே 15

மற்றவகையனைத்துமிறை மனதுகொண்டுமுடித்து
மதிப்படங்காதொருநூற்றிப் பதினான்குளழுத்தாய் 16
அத்தையுமேஅட்க்கியே அல்கம்துடன்லையொடுக்கி
அவனுமம்பிசுமிலென்று அதிசயமாகச்சொன்னான் 17
எத்தனைக்கும்பெரியதவ மிறைநாமம்பிசுமில்
இதற்குள்ளேயடங்கும்பொரு ளெடுத்துரைப்பதரிதே 18
அந்தபிசுமில்முத லானவிதமேதால்
அணுப்போலே கொண்டபுள்ளி அலிபாகநீண்டே 19
அந்தப்புள்ளிஅலிபு மமைந்ததொருபேயாம்
அந்தரத்திலானதிரு லதுமினைவுசிற்றும் 20
இந்தசிற்றேமீமாகி இதுநாலும்பிசுமாம்
இதுநாலுமவனுமே மிதுவிதம்வேறில்லை 21
அந்தரத்திலானசிற்று லமைந்தமீமுக்குள்ளே
அமைந்தவெளிநூறான பேருமருமூதாம் 22
பேறானதிறைநாமம் அல்லாகுவென்று
பிசகாமலேயெட்டும் பிசுமில்லாகியாகும் 23
இந்தவகையெட்டெழுத்தும் எண்கோணமாகி
எல்லாமுருப்படவே யானவிதமேதால் 24
வந்தவகைநூறுநாலா யதுநான்குபிரிவும்
வல்லமைகொண்டதுதானே அற்றகுமானாகும் 25
வந்தவிந்தையானவகை யெந்தவகையென்றால்
வவகந்துமுடிவானவள மனைத்தும்நிற்றகீமாம் 26
இந்தபிசுமிலுக்குள் ளுயிரெழுத்துமூன்று
எல்லாமறைகளுக்கு மேத்தமுள்ளதவமாம் 27
அந்தெழுத்தை யின்னதென்று அதினுடையவளமும்
ஆருஞ்சொல்லார் சொன்னாலும் ஆருமறியாரே 28
அந்தெழுத்து மூன்றிலொன்று அதுதானேதாத்து
அகத்தியத்துமதுதானே யதிலுமதைப்போலெ 29
வந்ததுதான் உகதத்தென்று அமைந்ததுசிபாத்து
வதிலுமதைப் போலமைந்த வாகிதியத்தாமே 30
வாகிதியாவானதென்ன [illegible]ளைந்துமுடிந்ததுவாம்
வரமானதவநிலையின் வாழ்த்துக்குயர்மணியாம் 31

இந்தவகையறியார்கள் முந்தவகையறியார்
அந்தவகையறியார்க ளந்தரத்திலாவார் 32

இந்தவகையறிந்தவர்க ளெந்தனுக்குங்குருவாம்
இவையறிந்த பேர்களெல்லாம் யாவுமறிந்தவராம் 33

யாவுமறிந்தவர்களென்று இருதயத்திற்சிறந்து
இவ்வையறிய வேண்டுமென்று எவருமடிதொழுதால் 34

அந்தவகையறிந்தவரை யடிபணிந்துதொழுதால்
அவர்மனதிலிரக்கம்வந்தா லணுப்போலேயுரைப்பார் 35

எந்தமட்டோ இறையருள்தா னெடுக்கமட்டும்போதும்
இதற்கதிகமானதவ மில்லையில்லையில்லை 36

வந்தவரேமனமறிந்து வருடமொன்றுதெரிந்து
வளமுளபேராயிருந்தால் வரிசைவளமிருத்தி 37

வளமாகஅகுநான்கு பிரிவுசொல்லித்திருத்தி [த்து
வரைந்தெழுந்துமூன்றுஞ்சொல்லி வரைபிரித்துக்கொடு

அந்தமூன்றில்கடையெழுத்தை யாதாரமாக்கி
அதற்குமுதலதற்கடியு மதற்கடியுமதுவாம் 39

இதமாகரண்டுமது ஒன்றானபொருளே
இதற்கடியிலிதமாக இருதயத்தைமாற்றி 40

முந்திசொன்ன எட்டெழுத்தில் முடிவெழுத்தென்றியம்பி
முன்னேசொன்னமுடிவெழுத்தை கடையெழுத்தாற்கொ

வந்தமுதல்வகையெழுத்தை வடிவானயெழுத்தாய் [ழுகி
வருமூன்றெழுத்தினால் வளமொன்பதையறிந்து 42

முந்தமுந்தமுதலான முதலெழுத்தையுன்னி
மூன்றெழுத்தும்பிசகாமல் முடிந்துபின்னியுன்னி 43

அந்தரத்தில்மந்திரத்தை யுருப்படுத்தும்விதத்தை
அடிபணிந்தார்க்கிந்தவித மருள்வோனே ஆசான் 44

இந்தவகையறியாத குருமாருங்குபிராம்
இறசூல்முகம்மத ருரைத்ததினால்சொன்னேன் 45

அந்தவகையறியாரைப் பணிந்தவருங்குபிராம்
அகும்மதிறசூல்நபியும் அருளியதால்சொன்னேன் 46

வந்தடிபணிந்துவகை கேட்குறவர்மனதை
வருடமொன்றுபரிசோதித்து வளமுளபேரானால் 47

சிந்தாமற்செயப்படுத்தும் பேர்க்குரைப்பதல்லால்
சிதறவிசிஞ்சிரியோர்க்கு ஜெகத்திலுரைசெய்தால் 48

வந்திடுமேகொடும்பாவம் வன்னரகிலழிவான்
வல்லோன் முகம்மதரும் வழித்தியதால்சொன்னேன் 49

இந்தவிதமுற்றமொழி யுற்றவருக்குரைப்பேன்
இதமாகஇசுலாத்திற் காதாரஞ்சொல்வேன் 50

ஆதாரமானவகை யாருஞ்சொன்னாறிய
ஆலமெல்லாந்தீனிசுலா மதியமென்று அறிய 51

ஆலத்துக்குள்தீன்குரிமே யதியமென்றுதெரிய
அறிவானமறைநெறியை யருளுவதைக்கேளும் 52

என்னவென்றாற்காபிரி சுளாமும்ரண்டுவிசளம்
எதுகாபிர்ளது இசுலா மினியோதக்கேளும் 53

நாமளிருபேர்க்கிடையி லிபுலீசுமென்ன
நாயனுக்குப்பகையான கருமமதுரண்டு 54

நானென்றஆண்மை அநா னியத்தினீயென்று
நான்வேறுநீவேறென்பது நாயனுக்குப்பகையாம் 55

நின்னயமேசமானும் நிலைத்தீசொல்லேஇசுலாம்
நினைவுவேறே இறைவேறென்றால் நிச்சயமாய்க்குபிராம்

ஆனதனாலறிந்துயிறை தானினைவானினைத்து
அனுதினமுமனுப்பிசகா ததுமிணக்கமிதுவாம் 57

ஐயமறஆதியென்று ஆருமிணையுன்றி
அவரவர்கள் தனையறிந்து தான்வணங்கவென்றே 58

நாயனின்றநானியத்தில் நால்மறையும்வகுத்தான்
நல்லசுகுயொருநூற்றி முப்பதையும்விடுத்தான் 59

செய்யமுறைபசுஞானஞ் சிதறுமற்கோத்து
ஜெகத்திலிறையிறக்கும்வேதம் சுபுகுமுழுதெல்லாம் 60

ஐயமென்றுமாற்றிதவு றேத்துமுதல்வேதம்
அதைமாற்றிமறுதாமு மழகுசபூர்வேதம் 61

வையகத்திலிறங்கியதை மாற்றிமறுதாமும்
வரிசைபெறும் இஞ்சில்மறை வந்துமூன்றாமே 62

இஞ்சில்சபூர்தவுலேத்து ஏகன்மறைமூன்றும்
இதற்குமுதலொருநூற்றி முப்பதுசும்பம் 63

பிச்சமுள்ளகலஞானம் மெய்வகையுமுண்டும்
மேலானதவநிலைகள் மெத்தவதிலுண்டும் 64

லட்சாதிலட்சம்வகை ஞானமுள்ளதெவையம்
லக்கமடங்காதகுலம் வணக்கம்பலவகையும் 65

உச்சிதமாயுடற்கூறு மூலகிலுள்ளதவமும்
உள்ளதெல்லாம்மூன்றுமறை சஃபிலுள்ளபொருளாம் 66

அத்தனைசெய்தாலுமவ ரறியாதவரென்றும்
ஆதியருளெனும்பலனு மவர்கட்கிலையென்றும் 67

அத்தனைக்குமுரைதீர ரவர்கட்கிலையென்று
அந்தமூன்றுவேதம்கஃ புள்ளதையுமாற்றி 68

அத்தனையிலுள்ளபொரு ளனைத்துமொன்றாயொடுக்கி
அணுவுக்குள்ளேகடல்மலையு மடைத்தவதிசயமாம் 69

முத்துமுகம்மதுற்ற சூல்நபிக்குவேண்டி
முன்னவன்தன் கிருபையினால் விண்ணுமண்ணும்புகழ 70

வெற்றியுள்ளபுறக்கானால் மேலானமறையாய்
விசளத்துக்குள்ளடங்காத வெகுகோடிதவமாம் 71

இத்தளத்திலிறக்கும் புறுக்கான்மறைமேலாகும்
இம்மறைக்கும்முன்மறைக்கு மதியமென்னவென்றால் 72

வெற்றியுள்ள அவூதும் மேலானபிசுமிலும்
வெகுபிழையுந்தீர்த்துவைக்கும் இஸ்திஃபாறோடு 73

அற்றகுபிர்க்குலங்களெல்லாந் தீன்குலத்திலாக்கும்
அடங்காதபொருளரன அவ்வலக்கலிமாவும் 74

உத்தபொருளானசஹா தத்துக்கலிமாவும்
ஒழுங்கானதஸ்பீகுத் தவூகீதுக்கலிமாவும் 75

மெத்தப்பெரிதீமானி லேழிசுலாமைந்தும்
மேலானஉலுவும்முழுக் கானபலவகையும் 76

வெற்றியுள்ள பாங்குடைய காமத்திமாம்தொழுகை
வேதத்திற்கு உறுதியுள்ள பறுலுகளால்கறும் 77

இத்தனைக்கும்பெரிதான ஆமீன்சலவாத்து
இசுலாத்திற்கடையாள முள்ளசலாமும் 78

அற்றிறந்தபேர்க்கோதும் பாத்திகாவும்பலனும்
அடங்காததற்ஜாவு மதற்குமுனாசாத்தும் 79

இத்தனையுமெண்ணான்கு மின்னம்வெகுளிதமும்
எப்போதும்கவிராம லொப்பாகப்பொருந்தி 80
ஒத்துவரும்பேரிசுலா முள்ள குலமாகும்
மற்றவகையுற்றதவம் சுத்துக்குபிறென்றே 81
ஏறிட்டபேரிசுலா முள்ளகுலமாகும்
ஏல்லாதவததுக்கிது தானேஇமாமென்றும் 82
மூன்னவன்தானிறக்கும்நாலா மறையிலிது அதிகம்
முன்னுரைத்த மும்முறையி லில்லையில்லையில்லை 83
இன்னவகைகருமத்துள்ளோ ரிக்தவமேநிறைய
இதைத்தவிர்ந்தாலிதற்குமூத லெழுத்துமறைக்கிணையாம்
மன்னனிறைதிருமொழியை மறையாகச்சமைத்து
மாநிலத்தில்மகுமூது நபிக்கிறையோன்சொன்னான் 85
என்றுமழியாதஇறை தூதுநபியுரைத்தார்
இந்ததமவற்றகுலம முந்தக்குபிறென்றும் 86
அந்திபகலொருகோடி ஆண்டுதவஞ்செய்தும்
அணுப்பலனுமில்லையென்று அருமதிறசூலும் 87
இந்துலகிலுள்ளவருக் கிருதயமாய்ச்சொன்னார்
எல்லவருமறியவென்று இன்பமதாய்ச்சொன்னேன் 88
இருதயத்திலித்தனையு மறிந்தபெரியோர்கள்
இதமாக் இன்னம்வகை சொல்வார்தெளிவாக 89
தெளிவானதீன்குலத்தி லுள்ளவரேகேளும் [ம்
தெவிட்டாமல்தொழுதுகொண்டு வணக்கஞ்செய்யவேணு
தொழுகையில்லாதெவராலும் தோசிப்பெரும்பாவி
தொட்டாலுமுழுகவேணும் தடக்கதிகக்கொடுமை 91
தொழுதுவந்தார்வணக்கமவர் தொடுத்துவந்தாரில்லை
தோகையர்கள்வாழ்ந்துமல டிருப்போலுவமை 92
தொழுகாமற்செய்யுமவர் வணக்கமுழுதெல்லாம்
தோகையர்கள் ஆடனில்லா தீன்றெடுத்தபாலன் 93
தொழுதுவந்தார் வணக்கமவர் செய்துவந்தாரில்லை
தோப்பில்லாக்கனியருந்தி தீர்ந்தபசியாகும் 92
தொழுதுவந்தார்வணக்கமவர் தொடுக்காதாரின்னம்
தோப்புக்குள்ளே கனிகளில்லாத் தூரும்மரம்போலே 95

அன்பில்லார் வணக்கமெல்லாம் ஆற்றிற்சலமில்லா
அழுதுவணங்கார்தவமும் அந்தநீராட்டம் 96

உள்ளன்பில்லாதுற்ற கள்ளர்செய்யும்வணக்கம்
வெள்ளெலும்பை நாய்கடித்த விதத்திலேயுமதிகம் 97

வழியானகுருவில்லாத வணக்கமுழுதெல்லாம்
வையகத்திற்புருடனில்லாள் வாழ்ந்தசுகமொக்கும் 98

தெரியாத் குருமாரின் றிருமொழிகேட்பதுதான்
தெரிவையர்கள் குசுரூவைச் சேர்ந்திருந்ததுவமை 99

சரியானகுருவில்லாத வணக்கமுழுதெல்லாம்
சாவல்லில்லாக்கோழிமுட்டை யிட்டதுபோலுவமை 100

சொர்ப்பனத்தில்வந்தகுரு சொன்னவுபதேசம்
சொர்ப்பனத்தில் சேர்ந்தபெண்ணு மதலையீன்றதுவமை

இப்படியேயறிந்தல்லவோ தொழுதுசெய்வார்வணக்கம்
இதமறியக்குருமாரை யெங்குந்தேடிப்பாரும் 102

தெருவீதியெங்குமலை வார்கள்குருமார்கள்
திருவருள்நிறைந்தபேரைத் தேடிக்கிடைக்காதே 103

அறியகுருமாருமற்ற அசடரையுமறிய
அறிவுபுத்தியுள்ளவர்க்கு அறிவுவரச்சொல்வேன் 104

பெரியவர்கள்சறகுடைய பிசகாதவணக்கம்
பிரியாவகைநிறுத்திவைப்பார் தீன்குலத்தின்வளமை 105

குருவாமுகம்மதர்தம் கோலந்தவிராமல்
குதாவருளே யிருபதிக்கும் கோடிகோடியாகும் 106

பெரியவுபதேசம்பேசுங் குருமார்களென்று
பெரிதானகாரணங்கள் பேசுவாரநேகம் 107

அரியவுபதேசஞ்செய்யு மருள்குருமார்தன்னில்
அதிலும்ரண்டுவிதமுமுண்டு அறியவகைசொல்வேன் 108

பீரானபீர்பெரிய பீருசாதாவுண்டும்
பீருசாதரவேஷம்பூண்ட கருமுச்சாதாவுண்டும் 109

கரும்சாதாதன்செயலை கருமத்தினாலறியக்
காசினியிலுள்ளவர்க்குக் கருத்தில்வரச்சொல்வேன் 110

காரணங்களொருகோடிக் கதைகளெல்லாமுரைப்பார்
கைபிடித்துக்காட்சிசெய்வார் காணுமந்தப்படியே 111

மெய்யாகஆதியிறை வேறில்லைநாமென்பார்
எந்தெந்தக்கருமமவர் நல்லதில்லையென்பார் 112
செய்யும்வகை நன்மைதின்மை யவன்செயல்தானென்பார்
ஜெயமானதொழுகைசற கேதுநமக்கென்பார் 113
வையகத்தில்சரீ அத்ததின் வளமையெதுவென்பார்
வரமதிகமகரிபத்தி லாகிப்போனேமென்பார் 114
ஐயமில்லையாசபாச மவன்செயல்தானென்பார்
ஆசைதீருமிடத்திலாதி யருள்நிலைதானென்பார் 115
செய்யுமிருபேரிணங்கி யாசைதீர்ந்ததென்றால்
எப்போதுமிருபேர்க்கு மிறையருள்தானென்பார் 116
பையப்பையக்கொழுகியாசை கொடுத்து அச்சந்தீர்ந்து
பத்தினியைபறுதலியைப் பழக்கிகரும்செய்வான் 117
எத்தனைசெய்தாலுமுழுக் கேதுநமக்கென்பான்
இனிமேலும் ஆகிறத்தி லென்பிணைநீயென்பான் 118
சுத்தமுட்டாட்பாவிக்குபி ராமகருமுசாதா
சொன்னதுபோலாகுமிரு பேருக்குபிராகும் 119
மெய்போலேவெகுவிசனம் பேசுகின்றவனே
மேலானவிசளமெல்லாங் கேட்கவகைசொல்வேன் 120
ஐயமறவுலகுதனி லிருக்குவனுக்குலத்தில்
ஆர்நரகவாதிசொர்க்க வாதிநீரேசொல்லும் 121
மெய்யாகவுமவுத்துடைய காலிலெந்தனுவி
லியம்புங்கலிவாவருஷமோ வாராதேசொல்லும் 122
வையகத்தில்நானிறந்தால் கேள்விமறுமொழிக்கு
வகைசொல்வனோ சொல்லேனோ எந்தனுக்குச்சொல்லும்
இவ்வுலகில்பிறக்குமுன்னே இவ்வுயிர்கள்முற்றும்
எந்தவிதம்ஆணோபெண்ணோ எடுத்துநன்றாய்ச்சொல்லும்
பிந்தவுமேயுருவழிக்கா ளிந்துயிர்கள்பலதும்
பெண்ணுருவோ ஆணுருவோ பிரித்துநன்றாய்ச்சொல்லும்
இந்தவகை விசளமாரு மெடுத்துரைக்கமாட்டார்
இத்தனையுமின்னவெகு கருமமிறைபங்காம் 126
அத்தனுடலிலாணும்பெண்ணு முருச்சமையும்வாறும்
ஆலத்திலே பிறந்தபிள்பு அவர்கள்செயலாலே 127

வெற்றிநன்மைதின்மைரண்டும் விதந்தரிக்கும்வறுகம்
வெகுசீமானெளியவனும் விதந்தரிக்கும்வாறும் 128

அந்தச்சீமானெளியவனு யவனேழைசீமான்
அரும்பாவியருளாளி யவள்பாவியாதல் 129

இந்தவகைவிபாமிறை யறிந்தரகசியமாம்
எடுத்துரைக்காரிறைநாம மெப்படித்தானுரைப்பார் 130

எவ்வளவுமேலான தருமமறியாதார்
உள்ளதெல்லாமறிந்திருக்கும் குமாரர்கள்போல 131

வள்ளலிறசூலுடைய வளமைபெறுமார்க்கம்
வையகத்தில்தீன்குலத்தின் வளமையென்றேசொல்வார் ()

எவ்வளவுமொருபலனு மில்லையதிலென்பார்
எப்போதுமிருதயத்தி லென்வணக்கமென்பார் 133

உள்ளுக்குள்ளே வணக்கஞ்செய்வே னென்றுரைப்பார்வெகுபேர்
உள்வணக்கமென்றோதுங் கள்ளர்களேகேளும் 134

உள்ளுக்குள்ளேநினைவாலே யுன்மனைவியோடே
யொன்றுபடச்சேர்ந்ததனு லுனக்குப்பிள்ளையுண்டோ ()

அள்ளியள்ளிக்கையாலே யசனமுண்டாப்போலே
அனுதினமும்நினைத்துப்பசி யடக்குவதுமுண்டோ 136

வெள்ளாமைசெய்வதுபோல் நினைத்துமுடியாது
வெகுதூரம்நடவாமல் நினைத்துமுடியாது 137

கொள்வகையும் கொடுவகையுங் கொடுக்கல்வாங்கலல்லை
உன்ளுக்குள்ளே நினைத்ததனு லொன்றுமுடியாது 138

கள்ளத்தனம்போக்கியருள் பெற்றுமதியுற்றுக்
கருமமெவ்லாஞ்சிறந்து கருத்துள்வணக்கஞ்செய்தால் ()

கத்தனிறசூல்சறனைச் பேர்ந்தஜளமாகும்
காட்சிதரவிராசற்கு தன்வணக்கமெல்லாம் 140

கத்தனிறசூலுடைய கனமானசறகு
கருமமெல்லாம்கற்றிக் கருத்துள்வணக்கமென்றால் 141

சுத்தக்குபிர்க்குலம் இலாகியுடவணக்கம்
சுசூதுசெய்யார்சுன்னத்து ஜமாஅத்துக்கு லமல்லை 142

புத்தியில்லார்சறகேது வணக்கமேதென்பார்
பொய்யாகுமவிர்விசனம் பொருந்தாமலுதறி 143

அஸ்கஃபிறுல்லாகில் அலீமெனவேசொல்லி
அனுதினமும்ஆரம்பாக மறிந்துதொழவேணும் 144
எத்தனையோவெஃகுகோடி யாவர்செய்யுந்ததமும்
இபுலீசுமுன்னாலே செய்ததவமாகும் 145
அத்தனையுமிபுலீசங் கறிந்துசெய்தானில்லை
அவன்வணங்காவணக்கமல் லா நாம்வணங்சவேணும். 146
சுத்தக்குபிர் இபுலீசு சுசூதுசெய்யாதிடந்தான்
சொல்லவென்றாலோரிடமு மில்லையில்லையில்லை 147
வல்லஇறைதனையும்நபி தனையுமவனாக
வையமெல்லாமவெகுகோடி காலமசுசூதிட்டான் 148
நல்லநசீபில்லாதால் நாட்டமதுதவறி
நமதுபிதர் ஆதத்துக்கு சுசூதுசெய்தானில்லை 149
அல்லாவுக்குவுவந்ததென்ன அகுமதுதம்மார்க்கம்
அகுமதுக்குவுவந்ததென்ன வனையிருந்தீனாக 150
அல்லாமுகம்மதிரு பேர்மனத்துக்கொன்றாய்
அதியதவம் ஆதத்துடபதமறிந்துபணிய 151
அல்லாமுகம்மதிரு பேரைமனதுற்று
ஆதத்துடபாதந்தனை யறிந்துதொழவேணும் 152
வல்லமையாய்ஆதத்துட பதம்வணங்காதாலே
வன்னரகுக்கெதியானான் வம்பனிடலீசு 153
நல்லபுகழ்ஆதத்துட பாதந்தனையறிந்து
நாடிகசூதிட்டகுலம் நபிகுலம்நீனாகும். 134
ஆதமென்ன அவருடைய பாதமென்னமென்றால்
அறியாதபேர்களெல்லா மறியர்சொல்வேன்கேளும் 155
வேதமென்றும் ஆகமென்றும் விளம்புவதுமதுதான்
வெகுபலதாய்ச்சமையுமுன்னே அந்தியத்தாயிருந்து 156
அதுதானே அகதத்தென்று அனைத்தையுமுள்ளொடிக்கி
அப்புறமும்வாகிதியா வானதிலோஆத்ம. 157
வாகிதியாவானதென்ன ஆதமுருவாச்சு
வகைவகையாய்த்தலைமுறையாய் வந்ததந்தவிந்து. 158
அந்தவிந்துஆதமுத லணியணிவந்ததனால்
அதுதானே ஆதத்துட பாதமதுநிசமாம் 159

விந்தைபெறும்ஆதத்துட விந்துநிறம்வெள்ளை
வெடித்தபுகையதுகாற்றாய் வெளியில்வருமூச்சாம் 160

மூச்சாகும்தம்மாகு முயிரும்கயாத்தாகும்
முடியாததம்மல்லவே ஆதமென்றுபேரு 161

ஆச்சரியம்மூச்சுக்கொரு ஆதாரம்அலிபு
அந்தலிபும்மூச்சுமல்லை ஆதத்துடபாதம் 162

அந்தலிபுநிலையறிந்து அதற்குசுஜூதிட்டால்
அதியதவம்ஆதத்துட பாதமதுநிசமாம் 163

அந்தலிபுநிலையறிந்து அரியதவஞ்செய்ய
அதியமுள்ளபெரியோரை யடிபணிந்தாற்சொல்வார் 164

எந்தனுக்குத்தெரியிதென்று எண்ணிமகிழ்ந்திருப்பார்
எவ்வளவுந்தெரியாது எவருஞ்சொன்னாலொழிய 165

அந்தவகையனுப்போலே தெரியும்படியுரைப்பேன்
அறிவுள்ளபேரறிவதல்லால் ஆர்க்குந்தெரியாது 166

வந்தவழியந்தாத்தே யுந்தன்விழியுற்று
வாசல்வழியற்றுப்பாச மற்றுநிலையுற்று 167

முந்திமுனையீறிதழும் முடித்,துஒன்றாய்ப்பிடித்து
உந்திவரும்ரண்டலே யொருமூன்றேதொடுத்து 168

உந்தன்மதியத்தரங்கம் அந்தநிலைபிடித்து
உறுதிகொண்டுஉவந்துசுஜூ திட்டகுலத்தீனும் 169

இந்தவகையறிந்துஇபுலீசுசெய்தானில்லை
இருதயத்திலிதையறிந்து எவரும்சுஜூதிடுவீர் 170

அந்தஇபுலீசு வணங்காதஇடமிதுதான்
ஆலமெல்லாந்தீன்குலத்தோ ரறியநன்றாய்ச்சொன்னேன்

இந்தமட்டுமுரைத்ததல்ல இனிவுரைக்குஞ்செய்தி
இசுலாத்திலுள்ளஇனி முழுக்குவகைகேளும் 172

முந்தஇசுலாத்திற்குல மானவரேகேளும்
முழுக்கறிந்துமுழுக்கும்வித முறையாகச்சொல்வேன் ()

முழுக்கும்விதியாகுமுன்னே முழுக்கறுக்கவேணும்
முழுக்குவிதியானால் முழுக்கறுக்கமுடியாது 174

அழுக்கறுக்கமுறையறியார் முழுக்குமவரறிக்கார்
அழுக்கல்லவோமுழுக்காகும் அறியவகைசொல்வேன் ()

உட்கருத்தில்முதலான வூனுதலையுன்னி
ஒன்பதுமே யொன்றான வொருபொருளேயாணி 176

அழுக்ககற்றியாணிமதி ஆதியென்றேயூணி
அணுப்பிசகா தொருமூன்றை யனுதினமும்பேணி 177

ஒளியாமலோசையுள்ள துயர்ந்ததவமாகும்
ஒருமுழுக்குமணுகாதே யுறையறிவார்க்கெல்லாம் 178

வழுக்காப்பிறந்துலகில் வந்தநாள்முதலால்
வழுவரசிமருங்கோடும் பாவமுழுக்காகும் 179

அழுக்காகுமுழுக்கைமவுத் தாகுமுன்னேயறுக்கார்
ஆகிறீனுமிழுக்காகு முழுக்கதிகாற்றம் 180

தெளிவாகக்கமலத்தமுக் கறுக்கும்வகையிதுதான்
தீனவர்களறியவின்னந் தெளிவாகச்சொல்வேன் 131

வழியானதீன்குலத்தி லுள்ளவரேகேளும்
வாயில்வரும்பொய்யுரையும் வலுமைக்கரும்பகீலும் 132

பழிகோபம்பெருமைமற்றக் கொடுமையுமேயகற்றிப்
பட்சமனதோர்மையுற்றுப் பான்பொருனேவணங்க 183

தெளிவாகக்கமலத்தமுக் கூறுக்கும்வகையிதுதான்
தீனவர்கள் கலிமாவென்பா ரதின்பொருளைக்கேளும் 184

கலிமாவுரைத்தவுலக முள்ளபெரியோரே
கலியென்னமாவுமென்ன கருப்பொருளுமென்ன 185

கலியென்றபொருளுடைய கருமம்சொல்லக்கேளும்
கலியாகும்ஆசையது கருப்பொருளுமாகும் 186

அலியாருக்கால்நபி தானுரைத்தவிசனம்
ஆசையின்பேர் கலியாகும் கலியுமிறைபங்காம் 187

சலியாதஇறைகலிமா ஈராறுஎழுத்தும்
சாற்றுவதுலாயிலாக இல்லல்லாகுஇதுவாம் 188

அல்லல்லாகூவென்றுசொன்ன அவ்வல்கலிமாவில்
ஆறிரண்டு எழுத்திற்குமே லானதொருகூவாம் 189

கூவாகும்ஆசையது கலியுமிதுவாகும்
சூலமானகலிமாவி லின்னமொருபாதி 190

பாதிமுகம்மதுற்ற சூலுல்லாகியாகும்
பாருலகில்நடக்கும்பரி மாவுமிதுதானே 191

மாவும்முகம்மதென்ற முதலில்வருமீமாம்
மாவுமிதுகலியுமது கலிமாவுமிதுதான் 192
கலியென்றகூவுடனே மாவென்றமீமதனைக்
கசகரமலோரெழுத்தாய் குன்னென்றதைக்கோர்த்து 193
இழையாதெழுந்துவரும் வாசியுடன்சேர்த்து
எத்திறக்கஞ்செய்பவரே யெப்போதுமூமீன் 194
மூமீன்கள்செய்யுந்தவ மாங்கலிமாரண்டு
முந்தனுடவுடலுக்குள்ளே யெங்கேயிற்குதென்றால் 195
இந்தவகைகூவும்மீமும் இணைத்துஒருயெழுத்தா
யிருதயத்தில்நிற்குமந்த இடத்தைச்சொல்லக்கேளும் 196
இந்தவகை ஆதியந்தம் ஆடிமுடிவுடைய
திருக்குமந்தஆச்சரியம் எல்லவருமறியார் 197
அத்தெழுத்தையெல்லவரும் அறியப்பெருங்கடனும்
அறிந்தவரையடிபணிந்தார் அதிசயத்தைச்சொல்வார் ()
இந்தக்கலியுடன்மாவி லிருக்கும்நிலையறிந்து
இதைத்தானே கமலத்துக்கு ளுருப்படுத்தவேணும் 199
உருவாகரண்டெழுத்து முன்சிரசிலுண்டும்
ஒருமிக்கவேரண்டெழுத்து முந்தியின்கீழுண்டும் 200
உந்தியின்கீழ்கமலசத்துக் குயர்ந்தநிலையாகும்
உருத்தரிக்குங்கருநிலைக்கு மொக்கவேகீழாகும் 201
உருமமில்லாக்கருகை யுருவாகச்செய்யுமந்தச்
சுருபமில்லாச்சுடரொளிவு சோதியருள்நிற்கும் 202
நிற்குமந்தாண்டெழுத்தும் நிலையொன்றுவாய்ரண்டா
நிலையாமல்நின்றாடும் அந்தரமற்றயிடத்தில் 203
அந்திடத்திறகுலென்ற அட்சரமூன்றெழுத்தும்
அந்தவட்டம கோட்டையுள்ளே ஆடிரண்டுநிற்கும் 204
அந்தரமாய்நின்றாடும் ஆசைகொண்டிரண்டும்
அந்தகூவும்மீமுமது தானேகலிமாவாம் 205
கலியுடனேமாவிரண்டும் கமலத்துக்குள்ளேற்றிக்
கசகாமல்கமலத்துள்ளே கருதலுருவானல் 206
வலியசனுக்கொடும்பிழையும் முழுக்குமப்போதீரும்
வாய்முகமுடற்கழுகிஉலுச் செய்யமுழுக்கிறங்கும் 207

பலிதமுள்வமுழுக்கிறக்கப் பரிசுத்தத்தண்ணீரில்
பற்றியுதுச்செய்தவுடன் சுத்திபெற்றோராவீர் 208

உற்றவர்களொருநேரம் தொழநூறுவருஷம்
ஓயாத்தொழுகையுள்ள வுயர்ந்தபலனாகும் 209

அத்தலத்திலொருநேர மவருடையவணக்கம்
ஆயிரவருஷந்திக்கிர்ச் செய்தபலனாகும் 210

இத்தலத்தில்ரண்டெழுத்து மாற்றியேபிடிக்க
இத்மறியாரெப்போது மெரிநாகிற்றாழ்வார் 211

அத்தலத்திற்கலிமாவை அங்கத்துக்குள்ளறியார்
ஆர்குலமுந்தீனறியார் அழன்ரகில்வீழ்வார் 212

கத்தவன்தலைகலிமார்ண்டும் கருத்துறவேபறிந்து
காசினியில்வணங்காத கள்ளத்தனமெல்லாம் 213

எத்தேயகாலமவ ரெரிநரகிற்றுள்வார்
எத்தவமும்கடலோடே கவிழ்ந்தவகையாகும் 214

உற்றசெய்தியாயுரைத்தே னுலகமெல்லாமறிய
உவமாமுகம்மதவ ருரைத்தபடிலாலே 215

உரைத்தபொருளீதென் றுயர்த்தியாயுரைத்தேன்
உயர்ந்தமனக்கிருபையினு லுன்மதியில்தரித்தேன் 216

எத்திசைக்குங்குருவான ஏகன்மகுமூதர்
ஏல்லவாக்குங்குருவாகும் எளிபேனுக்குங்குருவாம் 217

உற்றுமுதலுற்றதன வத்தணையுஞ்சிதற
ஓட்டிவெளிப்படுத்துமுய ரதிபெரியோனே 218

எத்தலமுமித்தலந்தா னின்றுலகுமறிய
அத்தலத்தையித்தலமென் றுருநிலையாக 219

புத்திமதிபெருமையுட னருமையுமில்லாதான்
புல்லறிவனவதினு லெல்லோருமறிப 220

உற்றசெய்தியாகயிதை யுலகவருக்குரைத்தேன்
உலமாமுகம்மத ருரைத்தபடியாலே 221

கத்தபெரியோரைப்பில் ஆலமீனேஹாதி
கடல்மலையிலதிகபிழை பொருத்தெனக்கிரங்கி 222

உத்தவனேயடியேனுக் கணுப்போவேயிரங்கி
உன்கிருபையெந்தனுக் குதவியருளாக 223

ஒண்பத்துநூறுதந்து மூதவிசெய்யவேண்மெ
உவந்தமனத்தோர்வையுற வுதவிசெய்வாயாதி 224

மண்டலம்புகழுமகு மூதுபொருட்டாமில
மகிழ்ச்சிதரவேண்டுமிரு பதிக்குமிறையாமீன் 225

மூந்தமுந்தமுதலான கலிமாவின்பொருளே
மூமீன்களனைவோரு முவாதறியச்சொல்வேன் 226

## இனி கலிமாவுடைய விபரஞ் சொல்லுகின்றது.

### விருத்தம்

கலிமாவில் நான்குகுலமா யெழுந்தபேரைக் காபிரென்னுங் குபிர்க்குலத்தை யிழந்தபேரைக் கலிமாவினுருவரயமைந்த பேரைக் கலிமாவுரைத்ததையு மறியாப்பேரை கலிமாவே கெதி யென்றிருக்கும்பேரை கலிமாவை வகுத்துச்சொல்லு மூலகத் தோரைக் கலிமாவையறிந்துகருத்திலிருத்திக் காரணத்தை சொல் பவரைக் குருவென்று கருதலாமே.

### கண்ணிகள்.

எத்திசையிலுள்ளமனு வானவெகுபேர்கள்
இறையோனுக்கோமா லிறசூலுக்கிசுலாமாம் 1

உத்தகுலம்தீனுக இருக்கும்பெரியோரே
உங்கள்குலங்கலிமாவை யுடலிலறிவீரே 2

மெத்தப்பெரிதானதவம் அவவல்க்கலிமாவை
மேதினிக்குள்ளறியாத பேர்கள்மனங்கழும்பர்ம் 3

கழும்பானகமலத்துள்ள அழுக்கையெல்லாம்நீங்குங்
காசினியில்தீன்குலமாங் கலிமாவைக்கேளும் 4

கலிமாஅறிந்தகுலம் கட்ந்தகுலமென்பார்
கானகத்துபக்ஷிகளுங் காபிர்களுஞ்சொல்வார் 5

அலிமாமனுர்க்கிறையோ னருளுங்கலிமாவில்
அறுநான்குஅட்சரமும் அங்கத்துக்குள்ளறியார் 6

அங்கத்துக்குட்கலிமாவை யறியாதகுருவை
ஆதரித்தபேர்குபிராம் அழனரகில்வீழ்வார் 7

அழியாதகலிமாவை அன்பாகவுரைப்பேன்
ஆர்குலமுந்தீனுக ஆதியருளாலே 8

அருள்கலிமாயிலாகா இல்லல்லாகுவென்றும்
அதுமேல்முகம்மதுற்ற சூலுல்லாகியாரும் 9

ஆனபுகழ்கலிமாவுக் கருநான்கெழுத்து
அதின்பொருளை ஆலமெல்லா மறியச்சொல்வேன்கேளும்
தீனவரேலாயிலாக இல்லல்லாகுவென்று
திருநாமமிதைச்சேர்ந்த நிராறுஎழுத்தும் 11
எழுத்திலைந்துபிரிவுமுண்டு எழுத்துநிறங்கேளும்
இதற்குமுதல்லாவென்று இருக்கும்ரண்டெழுத்து 12
எழுத்திரண்டுமெண்ணாகும் இருக்கும்வெள்ளையாக
இலாகவென்றால்மூன்றுந்தண்ணீ ரிலங்குஞ்சிவப்பாக 13
இல்லாவென்றால்மூன்றும்பச்சை இதுதானேநாற்று
இதுமேலும்அல்லாவென்ற அட்சரமூன்றெழுத்தும் 14
அட்சரமேஅக்கினியாம் அதுநிறமேகருப்பு
ஆகாரம்றாகுநிலை கூவும்நினைவாகும் 15
கூவாகுமோரெழுத்துக் குலமுயர்ந்ததங்கம்
குலமானகலிமாவில் எழுத்துமீரார்தானே 16
ஆனபுகழ்மகரிபத்தின் அர்த்தஞ்சொல்லக்கேளும்
அறிந்தவுடன் ஆலத்துள்ளோ ரன்றிசுலாமாச்சே 17
கூவாரும்றாகுநிலை கூமம்நினைவாகும்
கூவதுவும்மூச்சதுவும் கூவேகுத்தூசி 18
கூவேகுத்தூசிபது கூவுமதுஅல்லா
கூவுக்குள்ளேகுடிகொண்டு நாமிருப்பதாமே 19
இருக்கும்பொருள்கூவுடைய இடத்தையினிச்சொல்வேன்
இதினடியில் அல்லாவென்ற அட்சரமூன்றெழுத்தும் 20
அல்லாவென்றாலென்ன அது அதின்பொருளைக்கேளும்
ஆலமெல்லாம்நிறைந்து அழியாதுபழுதில்லை 21
பழுதணுகாத்துய்யபொருள் பரமனைத்தும்பாய்ந்து
பாங்குபெறும்கூவுடைய பேருமதுதானே 22
இந்தஇறைநாமம்ரண்டு லாமும்ஒருஅலிபு
இருலாமும்நடுமூலக் கிருபுறத்தில்நிற்கும் 23
நிற்குமிருலாமும்அடி மூலத்திருபுறமும்
நிதமாகஆதம்ஹவ்வா வாகுமிருலாமே 24
ஒக்கச்சொன்ன அலிபுநடு மூச்சுரண்டுஎழுத்தும்
ஒன்றுபட்டுவரும்விதத்தை யுவந்திடுங்கனஞ்சொல்வேன்

இன்னங்கலிமாவிலில்லா மூன்றெழுத்தில்பொருள்தான்
இருதயங்கொண்டெங்குமுள்ள தொருபொருளென்றறி
உரைத்ததொருஇல்லாவில் முதல் அலிபுமலாமும் [வீர்
உயிர்நிலையிற்பதினுலுளமூத்துக்குமேலெழுத்தாம் 27
எழுத்தாகலாம்வயித்றி விருக்கும் அலிபொன்று
எல்லாத்துக்கடிலாமில் இருக்கும் அலிபொன்று 28
ஒன்றுபோலேரண்டலிபும் லாம்வயிற்றில்நிற்கும்
ஊணிநடுப்பார்வைநுக்கத் தாகும்ரண்டலிபும் 29
நன்றுயிலாமூன் றெழுத்தின்பொருள்கேளும்
நமதுபொருளெங்குமிறை யதற்குமிணையில்லை 30
இணையில்லாதெங்குமது இருதயத்திற்சிறந்து
இலாஹவென்றஅலிபு எழுந்தகுறற்பேச்சு 31
துணையாக அல்லாவென்ற அலிபுநடுஹேயும்
தொகுத்தல்லவோ ஆகூவென்று துலங்கிவருமூச்சு 32
ஆகூவென்றுமூச்சுவரும் அலியோடுஹேயும்
அகாரஉகாரமிலோ அட்சரத்திநட்டம் 33
அகாரமென்றால் ஐந்துமூன்றும் அதுதானெட்டு
அட்டஅட்சரமான அநாதிமந்த்ரமதுதான் 34
உகாரமென்றால் ரெண்டுமதற் குயிர்நிலையுமாச்சு
உரையறியாரெட்டென்றால் ரண்டறியாதேழை 35
அறியுங்கலிமாவில்முதல் லாவென்றொருலாமும்
அட்சரத்தின்பொருளைநன்றாய் அவிழ்த்துரைக்கக்கேளும்
அறியவகைபலதுமவ னாகும்வேறேயல்லை
அடிமுடியுமில்லையது அழியப்பட்டதல்ல 37
உருவுக்குள்ளேதரிக்கப்பட்ட ஒளிவுகருநாதம்
உருவழியும் ஒருகுறையா துண்மையுண்மையுண்மை 33
உண்மையுள்ளகலிமாவி லுரைத்தேன்முதற்பாதி
ஓதுகிறேன்முகம்மதுற்ற சூலுல்லாகிபொருளை 39
முகம்மதுற்றசூலுல்லா யென்றபொருள்கேளும்[னெனச்சொ
முகம்மதென்றால்உண்மைகொண்டுஉண்மைகொண்டே
உண்மைகொள்வதெதுவானல் உருவம்முகம்மதுவாம்
உயிருமவனேவல்அவ னாகும்பொருளொன்று 41

பொருளாகுங்கலிமாமுன் பிரித்துரைத்ததெல்லாம்
பொருளவனும்தத்துவகை பிரிந்தவிதமாகும் 42
அருளானதாத்தில்நின்று ஆனதேசிபாத்து
அருமதென்றஅட்சர முகம்மதுருவாச்சே 43
முகம்மதென்ற அட்சரந்தான் முழங்கியுடலாகி [மை
முன்னொளிகொண்டொருவட்ட முண்மையுண்மையுண்
உண்மைமுகம்மதென்றே யுறைக்குநான்கெழுத்தும்
உடல்முழுதுமுருவாச்சு ஓங்குஞ்சிரந்தவிர 45
வண்மைபெறும்துற்றென்று வரைந்தரேயின்பொருள்தான்
வடிவானபொருள்துலங்கி வந்ததுவென்றறிவீர் 46
தனிமையில்லாறேயை இரு பிளப்பாகப்பினந்து
தரித்ததுபார்உடலுக்குள்ளே இருபங்காயாக 47
ஒண்மைமுகம்மதுற்ற சூளுமென்றெழுத்தும்
ஒருபொருளினுத்தரவா லுலகாட்டமென்றும் 48
வண்மைபெறும் மூன்றெழுத்தும் அடிமூலக்கோட்டை
வாசலும்காலுண்டதற்கு வளந்தெரியும்தீயும் 49
நம்பிறசூலுல்லாவென்ற அட்சரமூன்றெழுத்தும்
நாடும்பொருளுட லுயிரும் நபியுமிறையென்று 50
பாடிச்சொன்ன மூன்றெழுத்தால் சிரசுடலுக்காச்சிப்
பாங்காகக்கடைசிதன்னில் வருமேயொருஹேயும் 51
வருமேலாயிலாக இல்லை அல்லாகுஹேயும்
வடிவுமுகம்மதுற்ற சூலுல்லாகிஹேயும் 52
இருஹேயும்மீமும்மூலத் திருக்குங்குடியாக
ஈராறுஉள்ளெழுத்தில் இல்லென்னும்அலிபு 53
அலிபுநிலைகமலத்துள்ளே ஆடுமுயிராகும்
அதுநிலையிற்பதினுன்கு அட்சரமீரேமே 54
செம்பவளமூன்றங்குலம் சிறந்ததடிநிலையிற்
சிறந்தபச்சைநடுநிலையிற் பத்தங்குலமாமே 55
பொங்குப்வானிமெனுளிகோடி புகழ்ந்துமுத்திருட்டம்
பொற்பாசனத்திலுய ரங்குலமொன்றுமே 56
பங்கமில்லாக்கலிமாவுற் பதித்தநடுநிலையிற்
பாரமுள்ளரண்டெழுத்தும் பதித்துத்தலைமாறி 57

சிங்காரம் அலிபொடு லாமுங்கீமேமீமும்
சிறந்ததொருகரபும்நூனு மிருக்கும்ஐந்துமேலே 58

அங்கத்தின்கீழ்பேயோடு ஏயும்காபும்வாவும்
அதின்கீழே நூனுகி அமைந்ததைந்துஎழுத்தும் 59

எழுத்துப்பத்தில்லொன்பதுதான் இருக்கும்பச்சைநிறத்தில்
இதற்குமுதல்அலிபு இலங்கும்ஒளிமேலாய் 60

ஆனழுத்துப்பச்சையுமாய் அமைந்தெழுத்துமுரைத்தேன்
அருமதென்றநான்கெழுத்தும் அடியில்சிவந்துருவில் 61

எழுத்துப்பதினொன்றுடைய இடமூன்றாய்ச்சொன்னேன்
இதுகலிமாமகரிபத்தென் றெவருமறிவீரே 62

முழுத்தமுள்ள அலிபு முதலெழுத்தைக்கேளும்
முன்னுளில்றுக்கத்துமுத்தாய் மூனத்த அலிபொன்று ( )

அதேலிபு ஆதிபங்காம் அதற்பிறந்தபவளம்
அருமதென்ற அலிபு அதிற்பிறந்தபச்சை 64

பச்சைநிறம்ஆதமல்லோ முச்சுட்ருமாச்சுப்
பார்வைஜபறாத்துமக்காம் நடுநிலையில்தோன்றும் 65

தோன்றுமிதேசல்தான் சிறுவில்நிலையாம்
துலங்குவட்டம்மக்காமன் மகுமூதாநிலையில் 66

உருவச்சிவப்புஉடல்பச்சை றூகுவெள்ளையொளிவாம்
ஒத்தநிலை அலிபை யுறுதிகொண்டேநினைத்து 67

உயர்த்தியுளநினைவில் வணக்கமென்றேயுவந்து
உண்மையுள்ளநினைவுதன்னை யொதுக்காமல்நிறுத்தி 68

இந்நிலை அலிபு தொழுகைநிலையெழுந்து
இனிக்கேளும்றூகூவின் தொழுகைநிலையெழுத்தை 69

அகதல்லவோஊகதாகி அருமது ஹாமீதாய்
அதுநான்குஹேயெழுத்து மறியவிண்ணோர்வணக்கம் 70

நாமுமந்தவணக்கமென்றே காட்டங்கொண்டேநிறுத்த
நலமாம்றூக்கூவுடைய நடப்புமிதுவாமே 71

அகதல்லவோ அருமது முகம்மது ஹாமீதாம்
மகுமூதாமகிழ்ச்சியுள்ள காலுமீமைநாடி 72

நாட்டமுள்ளகதிர்மதிமீன் வணக்கமிணையாக
நாம்வணங்கும்வணக்கமென்று நாடிசஜிதாச்செய்ய 73

ஆனவரே இருப்புடைய எழுத்தைபினிக்கேளும்
அன்னேகுதா அகத்துடனே அருமதுமே ஆதம் 74

ஆதமுடனிதுநாலும் நாலெழுத்தாயிருந்து
அறுசுடையவணக்கம் அனவோருடையவணக்கம் 75

இந்தவகைநாலெழுத்தும் எண்ணியேதொழுக
இரவில்தொழுமரகசியத்தின் தொழுகையெழுத்தாகும் ()

உலகுதனிலொருநாளிற் றொழும்விபரங்கேளீர்
ஓரறிவிலேழுத்ரம் தொழுகஅருள்பெறுவார் 77

நிலையானதொழுகையுட நிசமறியச்சொன்னேன்
நிச்சயமாயுறுபுடைய நேர்மைசொல்லக்கேளும் 78

உறுபென்றுசொல்லுவது உலகிலிசுலாமாம்
ஒழுங்கோடேநடப்பதுதான் உறுபென்றறிவீரே 79

உறுக்காபுநிலையுடைய அறுத்தஞ்சொல்லக்கேளும்
உள்ளபலகலையுடைய வுட்பொருளையறிந்து 80

அறிவதுதான்கலைநெறியை யறபுநிலையாகும்
அதியமுள்ளஉறுகாயு அறிந்துகொள்ளச்சொல்வேன் 81

சொல்லுகிறேன் உருபான தீன்குலத்திலிருந்து
சுருதிநிலைமறையான அறபுநிலையறிந்து 82

எள்ளளவும்பிசகாமல் நேர்மைகொண்டுவருக
இதைத்தானேஉறுக்காபு நிலையென்றுரைசெய்த 83

நிலையாகமுரீதுடைய நிலைமைசொல்லக்கேளும்
நிலத்திலுள்ளபொருளையெல்லாம் நினைத்துமனமலைந்து 84

நிலைதவறிநினைவுகெட்டு நிச்சயமேகுலைந்து
நின்றலையும்போதுகுருக் கண்டடிபணிந்து 85

என்றுமுள்ளபெறியவரே யென்னினைவுஆடி
யெங்குமலையாமல்நிலை நிறுத்துவையுமென்ன 86

சங்கைபெருங்குருபாதத்தின் சரணமதுசெய்தால்
சந்தோஷமானபின்பு தன்பதத்திலிருத்தி 87

எந்தமாட்டோபொருட்சுமக்க வலுமையுள்ளானென்று
எழுநான்குயாதிலொன்றும் எட்டுமக்காமுண்டும் 88

வழியாறுபாதையுண்டும் வணக்கமைந்திலொன்றும்
வருத்திவைப்பாரதுதானே முரீதுநிலையாகும் 89

முரீதுநிலையிதுவாகு முன்னலைந்தநினைவை
மோசமொன்றும்மாற்றியொன்றை யுறுதிகொண்டேபிடித்து

கருத்திற்பிசகாமலந்தப் படிவணக்கஞ்செய்வார்
காட்சியொன்றுங்காணாமற் கருமனங்கலங்கி 91

இருளறையிற்குருடர்சென்றே யிலங்குரத்தனந்தேடி
எப்படியோதடுமாறு மப்படியேவுளறி 92

பொருளானபூரணத்தைக் காணாமலலைந்து
புலம்பினதைபுலம்பியல்லோ போகுமவர்காலம் 93

மருளாமற்பலனினைவை மாற்றியொருநினைவாய்
மனது தன்னை நிலைநிறுத்திமாளாமல்மாண்டு 94
இன்னதொருவணக்கநிலை யிணையுமில்லையென்று
இருதயங்கொண்டிருக்கும்விதந் தானேமுரீதாகும் 95
நறைகமழும்தாலியுட நன்மைசொல்லக்கேளும்
நானிலத்திற்குருதேடி நாளுமடிதொழுது 96
பெரியவரேயென்குருதான் சொன்னவுபதேசம்
பேரானஇறைநாமம் இன்னதென்றெடுத்து 97
அறியவகைதெரியுப்படி பிரிவெடுத்துத்தாரும்
அந்தந்த அட்சரத்தின் நிலையெடுத்துத்தாரும் 98
குருபதத்திற்பணிந்துவுப தேசமதுகேட்கில்
குருநாதன்றிருமாணூர் கூறுவதைக்கேளும் 99
அரியகுருமுன்னுரைத்த அட்சரத்தைக்கேட்டு
அணுவும்பிசகாமல்அதை அங்கத்திற்குட்காட்டி 100
பிரிவுசொல்லியதினுடைய பொருளெடுத்துக்காட்டி
போதமுள்ளதெரிசனையின் பிரிவுகளுஞ்சொல்லி 101
ஒருபடிக்குஒருபடிதா னுயிர்த்தநிலையேத்தி
ஓர்மையுள்ளவணக்கமதில் நிலைநிறுத்திவைப்பார் 102
நிலைநிறுத்திவணக்கமதி னென்றானவெழுத்தும்
நிலையானவெழுத்தனைத்தும் நிற்கின்றதலமும் 103
கலகலெனத்தனித்தனியே பிரித்துமுதலுரைத்தேன்
கருத்துறவேயறிந்தவர்க்குக் காட்சிநிலையாகும் 104
திருநிலையையறியாத திருடர்செய்யுங்காலம்
திறமாகமுன்வணங்கும் யாதுநிலைமாற்றி 105
பின்னையொரு அட்சரத்தைப் பெரிதென்றுசொல்லி
பேய்த்தளத்தில்வருத்திவைப்பார் பேய்மனிதர்கேளும் ()
அன்றுரைத்தவுபதேச மல்லவென்றுபோனால்
அரும்பாடுபட்டதெல்லா மந்தரமாப்போச்சே 107
இன்றுரைத்தவுபதேச மிருதயமேகொண்டால்
இதற்முதலுபதேச மல்லவென்றதறுத்தம் 108
அல்லவென்றபொருளென்று அணுவும்நினைவானால்
அதனையுங்கொடும்பாவஞ் சுத்தக்குபிராகும் 109
முத்தானயாதுநிலை முன்வணக்கம்போனால்
முறையாகப்பின்வணக்க மோசமதுவாச்சு 110
அத்தாட்சிசொல்லவென்னா லாகுதில்லைசடக்கை
அறிவுடையபேர்கட்கிந்த அத்தாட்சிபோதும் 111
முறையாகமுன்வணங்கும் யாதையும்விடாமல்
முறைமுறையாய்படியேறி மூதறிவிற்கூடி 112

என்னவென்ன இதற்குமுன்னே யெடுத்துரைத்தேன்கவியில்
எவ்வகையுந்தானறிந்து எழுத்துநிலையறிந்து 113

இலங்கும்பொருளெங்கேயென்று இருதயத்தில்நாடி
எப்போதுந்தேடுவது தாலிபென்றுசொன்னேன் 114

தாலிபென்றுதேட்டங்கொண்டு தானலையும்விசளம்
தம்காத்தென்றுரைக்குமந்தத் தவப்பொருளைக்கேளும்

தவத்திலவர்தேடியுடலத் தலங்களெல்லாமலைந்து
தனதுபொருளிதுவெனவே தானறிந்துமகிழ்ந்து 116

நிலைத்தசொல்லைமனதிருத்தி நெடுவாசியேற்றி
நித்தனுடனிற்றிருப்பார் நிலத்திலறிவாளர் 117

உற்றசெய்தியாகவிதை ஒளியாமலுரைத்தேன்
உண்மையுள்ளதம்கீத்து உலகவரேயிதுதான் 118

இத்தலத்திலிசுலாத்தி லுள்ளவரேயெல்லாம்
இருபாகமெப்பேபாது மென்சிரத்திலேற்றி 119

குற்றமெல்லாம் விலகிநீரோர் குலங்களொலியாகக்
குவலயத்தில் பிசுமில்குறங் கொஞ்சந்தமிழாக 120

ஒருபத்துஒன்பதிந்த வுயர்ந்தறிவுநிலையும்
ஒழுங்கானகலிமாவும் ஓரெழுத்துநிலையும் 121

தொழுகைமுரீதுடைய வெழுத்துவகைநிலையுந்
தொடுகுறிபோலுலகமெல்லாந் தோற்றும்படியாக 122

பாடிப்பாடியறிவையெல்லாம் பங்குபங்காய்ச்சொன்னேன்
பயல்பீர்முகம்மதென்போன் பகரும்பிசுமில்குறமென் [னும்

மெய்யான அறிவுதனை மேதினியிற்படிப்போர்
மெத்தமனங்கொண்டுபுத்தி மேவியிதைக்கேட்போர் 124

வையகத்தில் மவுத்துவரும் போத்றிவைக்கேட்டு
வருந்தயிலேமதிமறந்தே யிறந்துவருங்கூட 125

துய்யவன்றன்தூதரி றசூல்பெருட்டினாலே
சுன்னத்துச்சமாத்துகளுடன் சூழ்ந்தகுழுவாசு 126

மெய்யாகசொர்க்ககதி மேன்மையுள்ளபதவி
மெத்தவெற்றிபெற்றநபி யுற்றகொலுச்சார்பில் 127

ஐயமறச்சொர்க்ககதி யாசுகொலுவாக
அல்லாகொடுத்தருள்வா ஆமீன் ஆமீன் ஆமீன். 128

வெண்பா-1, விருத்தம்-10 கூடியகண்ணிகள்-600 ஆககவிகள்-601

பிசுமில் குறம் முற்றிற்று.

---

ஸ்ரீமகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.
Q. H. M. S. No. 93. C. 2000 6-2-47.